பகுத்தறிவே விடுதலை

அல்லது,

ஜீவாத்மா இல்லை.

இஃது

உடுமலை, கனகராஜன்,

எழுதியது.

[உரிமை பெற்றது.] விலை அணா 6.

R34
N31
67936

பகுத்தறிவே விடுதலை

அல்லது

ஜீவாத்மா இல்லை.

இஃது

உடுமலை, கனகராஜன்,

எழுதியது.

1931.

காப்பிகள் 1000.

ம பெற்றது.]

விலை அணா 6

முகவுரை.

நண்பர்களே, என்னை இச்சிறு புத்தக மெழுதத்தூண்டியது யாதெனில், நம் நாட்டு மக்களுடைய முயற்சிகள் பயன்படாத முறையில் நாசமாக்கப்பட்டுவருவதையும், கடவுள், பரலோக விஷயங்களிலும், தேசீய சுயராஜிய விஷயங்களிலும், ஆராய்ச்சி சிறிதுமின்றி கண்மூடித்தனமாய் நடந்துகொள்வதைப்பார்த்து உண்டான மன வெழுச்சியே யாகும்.

இப்புத்தக வாரம்பத்தில், சாதாரண மக்கள் முதற்கொண்டு யாவரும் அறிய விரும்பி படங்களுடன் எழுதினேன். தேசியத்தில் மக்கள் மிக சிக்குண்டிருத்தலால், விடுதலைக்கு உண்மையான மார்க்கம் எது என்பது விளங்குவதற்கு ஒரு படம் அவசியமென்று நினைத்து அதை வரைந்துளேன். கடவுள் ஒருவர், அவர் ஆசையில்லாதபொருள், எங்கும் நிறைந்துள்ளவர், அதற்கு நாம்ஒன்றும் செய்யவேண்டியதில்லை என்பதைப் பாமரமக்கள் உணரும்வகையில் படங்களுடன் வரைந்திருக்கிறேன். பிறகுவியாசங்களே போதுமானது என்று ஒருவாறு எண்ணியதால், வியாசரூபமாக அபிப்ராயங்களை வெளியிடலானேன். பின் சாமியார்கள் செய்யும் அக்கிரமங்களையும், அவர்களுடைய கொள்கைகளையும் கண்டித்து எழுதுவதும், அவர்களுடைய பாரமார்த்திகப் பித்தலாட்டத்தை வெளிப்படுத்துவதும், மக்களுக்கு பயனளிக்கும் என்பதை உணர்ந்தேன்.

மதம் என்னும் தலைப்பின்கீழ் நம் இந்தியநாட்டின் துக்ககரமான சம்பவத்திற்கு அடிப்படையாகவுள்ள இந்து முஸ்

லீம் தகராறுகளுக்கு பரிகாரம் இன்னதென்பதைப்பற்றி எனது தாழ்மையான அபிப்பிராயத்தையும் கூறியுள்ளேன். கர்மம், மறு ஜென்மம் இவைகளில்லை என்று பொதுப்படையாகவும், மக்களை அறியாமையில் ஆழ்த்துவது பரலோகம், என்னும் தலைப்பின்கீழ் ஜீவாத்மா இல்லை என்று சாதாரண ஜனங்கள் அறியுமாதிரியில் என்னாலியன்ற மட்டில் தெளிவுபட விளக்கியுள்ளேன். மற்றும் வர்ணாச்சிரமதர்மம், பகுத்தறிவு, காதல் முதலியவைகளைப்பற்றி எழுதி புத்தகத்தை ஒருவாறு முடித்தேன்.

முக்கியமாக மூடநம்பிக்கைகளினாலேயே, தீண்டாமை, விக்கிரக ஆராதனை, பெண்கள் துயரம் முதலியவைகள் உண்டாகி, மனிதசமூகத்தைக் கெடுத்துவிட்டது என்ற உறுதியான முடிவுக்கு வந்ததின் காரணமாய், இம்மாதிரியான அநேக கொடுமைகளுக்கு ஆதாரமாயுள்ள, மூடநம்பிக்கையை போக்கி, மக்களிடத்தில் பகுத்தறிவு பிரகாசிக்கவேண்டுமென்பதே இப் புத்தகத்தின் நோக்கமாகும். மக்களுடைய துன்பங்களை யகற்றி சாந்தியையளிக்க வல்லது பகுத்தறிவு என்று அறிந்ததாலும், மூடநம்பிக்கைகளுக்கு மூலபலமாயுள்ள ஜீவாத்மா என்பது இல்லை என்று தெரிந்ததாலும், இப்புத்தகத்திற்கு, பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை, என்று பெயரிட தீர்மானித்தேன்.

நான் எனது அன்பான வாசகர்களுக்கு பணிவாக தெரிவித்துக்கொள்வது யாதெனில், நான் எழுதியதில் சொ[illegible] குற்றங்கள் இருக்கக்கூடும். அறிந்தே, சாதாரண மக்களுக்

குத் தெரியுமாதிரியில், வாக்கியங்களும், சொற்களும் உபயோகப்படுத்தியிருப்பதால், பிழைகள் நான் எண்ணியதற்கு மேலாகவேயிருக்கலாம். அதுவுமன்னியில் நான் தமிழ் பாஷையில் அதிக பாண்டித்திய முடையவனுமல்ல என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் எழுதிய விஷயத்தில் எதாவது அபிப்ராயபேதம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். அது சகஜமே. நான் ஒரு சக்தி (ENERGY) இருக்கிறது என்பதைப் பூர்ணமாக நம்பினவன். ஆனல் அதை நான் கடவுளென்று சொல்லுவதுமில்லை, சொல்லுவோரை வேண்டாமென்று சொல்லுவதுமில்லை. அந்த சக்திக்காக நாம் செய்யவேண்டியகாரியம் ஒன்றுமில்லை என்பதை மாத்திரம் வற்புறுத்திக்கூறுவேன். முடிவில் வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுவது யாதெனில், தற்சமயம், பொதுவாக மனிதசமூகத்திற்கும், சிறப்பாக நம்பாரத நாட்டிற்கும் இவைபோன்ற புத்தகங்கள் அவசியமாயிருப்பதால், ஆங்காங்கு சிற்சில பிழைகளிருப்பினும், அவைகளை நீக்கி குணத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதேயாகும். அறிஞர்கள் இதைவாசித்து சில திருத்தங்களை எடுத்துக்காட்டினல், இரண்டாம் பதிப்பில் சீர்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

இப் புத்தகமெழுதிமுடிக்க, ஊக்கமும், உற்சாகமும் கொடுத்துதவிய நண்பர்களனைவருக்கும், அதிக அன்போடு இதை அச்சிட்டுக்கொடுத்த எனது நண்பர், (Gopal Printing Works, புரோப்ரைட்டர், ராதாகிருஷ்ண செட்டியார், அவர்களுக்கும், எனது அன்பான வந்தனம் உரித்தாகுக.

உடுமலை, கனகராஜன்.



(தீண்டாமை, பெண்கள் துயரம்) (பாரத மாதா)

எய்தவனிருக்க அம்பை நொந்துகொள்ளாதீர்கள்.

இப்படத்திலுள்ள கொடியவன், தீண்டாமையின் கொடுமையாலும், பெண்கள் துயரத்தாலும் ஆக்கப்பட்டவன். இக்கொடியவன், அன்னியராட்சி என்னும் அம்பாரத்தூணியிலிருந்து அடிமை என்னும் அம்பை எடுத்து, வறுமை என்னும் வில்லில்வைத்து நம் பாரதமாதாவை எய்கிருன்.

தீண்டாமையும், பெண்கள் துயரமும், நாம் அடிமையாயிருப்பதற்குக் காரணங்களாகும். பள்ளமுள்ள பக்கம் தண்ணீர் பாய்வதைப் போல், மூடநம்பிக்கையால், அறிவு மழுங்கி, பலங் குன்றிக்கிடக்கும், நம் இந்திய சகோதரர்களிருக்கும் நாட்டிற்கு, பலமுள்ளவர்கள் வந்து ஆட்சி புரிவது இயற்கையே. ஆகையால் நாம், நம்மை பலமுள்ளவர்களாக செய்துகொண்டால், அன்னியர் நுழையமாட்டார்கள். நம் மூடநம்பிக்கையை ஒழித்தால், அதனுலுண்டான, தீண்டாமை முதலிய கொடுமைகள் ஒழிவதுடன், அன்னியராட்சியும் ஒழியும் என்பதை இனிமேலாவது உறுதியாக மனதில்வைக்க வேண்டுகிறேன்.

இந்தியா என்னும் செடி.



இந்தியா என்னும் பழங்கள் இல்லாத செடிக்கு வௌவால் என்னும் சுயராஜ்யம் எப்படி வரும்? இயற்கையாக அதற்கு (சுயராஜ்யம்) வௌவால் வராது. ஆனால் வௌவாலை (சுயராஜ்யத்தை) கொண்டுவந்து கட்டிப்போட்டால், வௌவால் இந்தியா என்னும் செடியில் தின்பதற்கு பழமில்லாமல் எப்படி செத்துப்போய், நிலைக்காமல் போய்விடுமோ அதே மாதிரி இந்தியாவிற்கு இந்த நிலைமையில் சுயராஜ்யம் கிடைத்தாலும் நிலைக்காது. அப்படி நிலைத்தாலும் படித்தவர்களும் பணக்காரர்களும் அனுபவிப்பார்களே ஒழிய பாமரமக்களுக்கு யாதொரு பலனையும் அளிக்காது.

வௌவால் சுயராஜ்யம்



முன் செடியாயிருந்த இந்தியாவில் சுயராஜ்யம் என்ற வௌவாலைப்பிடித்துக்கட்டிவைத்தும் நிலைக்கவில்லை. அந்த செடிக்கு சமத்துவம் என்ற தண்ணீர் ஊற்றினால் அந்த இந்தியா என்னும் செடி மரமாகிறது. பிறகு அந்த மரத்தில் ஒற்றுமை என்னும் பழங்கள்பழுக்கின்றன. அந்த சமயத்தில் வௌவால் என்னும் சுயராஜ்யம் அழைக்காமலே வந்துவிடுகிறது. வேண்டாமென்றாலும் நிற்கப்போவதில்லை. ஆகையால் நாம் இப்பொழுது, அதாவது நமது இந்தியா செடியாயிருக்கும்பொழுது நிலைக்காமலிருக்கும் சுயராஜ்யம் என்னும் வௌவாலைப் பிடித்துக்கட்டுவது தவறு.

நாம் இப்பொழுது செய்ய வேண்டியது.

சுயராஜ்யம் என்னும் வௌவால் இயற்கையாகவே வந்து நிலைக்குமாறு செய்யவேண்டும். அதற்கு சமத்துவப் என்ற தண்ணீர் பாய்ச்சவேண்டும். நாம் இப்படிச் செய்தால் ஒற்றுமை என்னும் பழங்கள் பழுக்கும். பிறகு சுயராஜ்யம் என்னும் வௌவால் இயற்கையாகவே வந்துவிடும். ஆகையால் நாம் உப்புப்போர் துடங்குவதைவிட சமத்துவப்போர் ஆரம்பிப்பதே சிலாக்கியமானது.

சுயநலக்காரர்களால்கற்பிக்கப்பட்ட கடவுள்.



அறியாமையால் வந்த கடவுள்.



இம்மாதிரி அறியாமையால் மக்கள் ஒவ்வொன்றையும் கடவுள் பிரியப்படுகிறார் என்று நினைத்துக்கொண்டும், கடவுளுக்கு நேர்த்திக்கடன் என்று கருதியும், அநேக அர்த்தமற்ற மூடப் பழக்க வழக்கங்களை வைத்திருக்கிறார்கள். சிலர் காலில் சீக்கு வந்துவிட்டால் பாதரட்சை செலுத்துவதாகச் சொல்லிக் குப்பிடுவது வழக்கமாக வைத்திருக்கிறார்கள். சௌகரியமானவர்கள் கடவுளுக்கு ஒரு ஜோடி செருப்பு வாங்கி சாமிக்குத்தந்து தங்களுடைய நேர்த்திக் கடனைத் தீர்த்துக்கொள்ளுகிறார்கள். சிலர் மார்பில் கத்தி

களால் அடித்துக்கொள்கிறார்கள். சிலர் ஊசிகளையும், அலகுகளையும் குத்திக்கொண்டு அக்கினிச்சட்டிகளை எடுக்கிறார்கள். சில புத்திசாலிகள் சாட்டையால் தங்களையே அடித்துக்கொள்கிறார்கள். இன்னொரு தமாஷான சடங்கு இருக்கிறது. அதை உங்களுக்கு எடுத்துச்சொல்லப் பிரியப்படுகிறேன். அதாவது ஒரு குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையை குளிப்பாட்டின பிறகு, ஒரு சீவக்கட்டை, ஒரு செருப்பு, ஒரு கொள்ளிக்கட்டை முதலியவைகளை எடுத்துக்கொண்டு குழந்தைக்குப் பக்கத்தில் மேலே குறிப்பிட்டவைகளை (அதாவது விளக்குமாறு, செருப்பு, கொள்ளிக்கட்டை) ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு, ஒ தெய்வமே! கொண்டுபோகிற தெய்வமாயிருந்தால் இன்றைக்கே கொண்டுபோய்விடு, நாளைக்கு வந்தால் கையிலிருப்பதால் அடிப்பேன், சுடுவேன் என்று கடவுளை பயமுறுத்துவது ஒரு சடங்காயிருக்கிறது. இப்பொழுதும் இந்த சடங்கு சிலவிடங்களில் நடைபெறுகிறது. இப்பேர்ப்பட்டவர் உண்மையான கடவுள் சொல்வதைக் கவனியுங்கள்.



உண்மையான கடவுள் சொல்வதாயிருந்தால் இம் மாதிரி தான் சொல்வார்.

எனக்கு ஒன்றும் வேண்டாம். தங்கம், வெள்ளிஎன்னுடையதே தேங்காய், பழம், கூடம் என்னுடையதே. என்னுடைய பொருளேயே எடுத்து எனக்கு வழங்கினுல் எனக்கு உங்களிடத்தில் பிரியம் உண்டாய்விடாது. மேலும் அது என்னை ஏமாற்றின மாதிரி. நீங்கள் எல்லோரும் அன்புடன் சமத்துவமாய் இருந்தால் அதே எனக்கு மிகவும் திருப்தியைத்தரும். இனிமேலாவது என் பேரைச்சொல்லிக்கொண்டு பலி கொடுக்காதீர்கள். கள்ளும், சாராயமும் எனக்கு எதற்கு? என்னைக்கல் ஒன்று வைத்துக்கொண்டு, அந்தக் கல்லின்மேல் பால் முதலியவற்றைகொட்டி ஏன் நாசப்படுத்துகிறீர்கள்? எத்தனையோ ஏழைக் குழந்தைகள் பால் இல்லாமல் தவிப்பது உங்களுக்குத் தெரியாதா? என் பெயரைச்சொல்லி கல்லின்மேல் கொட்டும் பாலே அக்குழந்தைகளுக்குக் கொடுத்துதவினுல் எனக்கு மிகவும் சந்தோஷத்தைத்தரும்.

முக்தி ஸ்தலங்கள்.

உண்மையான கடவுள்:— நான் எல்லாவிடத்திலும் இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தும் நீங்கள் ஏன் அறிவில்லாமல் ஸ்தலம் ஸ்தலமாய்போய் பணத்தை வீண் விரயம் செய்கின்றீர்கள். நீங்கள் இருந்த இடத்திலிருந்து எல்லோரையும் ஜாதிபேதமின்றி அன்பாக நடத்தினுல் அதுவே உங்களையும் என்னையும் சந்தோஷிக்கச்செய்யும். அன்பில்லாமல் ஆஷாடபூதிவேஷம்போட்டுக்கொண்டு வாழ்நாள் பூருவும் கும்பிட்டாலும் நான் அவைகளை ஏற்றுக்கொள்ள மாட்டேன், என்னைப் பொய்யாக கும்பிட்டுக் கொண்டு அன்புக்கு விரோதமாயிருந்தால் அவர்கள் அயோக்கியர்கள்தான். நீங்கள் எல்லோரும் என்னை நேராகவே கும்பிடுங்கள் உங்களுக்கும் நமக்கும் மத்தியில் தாகர்கள் வேண்டியதில்லை. உங்களுடைய பிறந்த லக்கினத்தையும் பெயரையும் ஒரு பார்ப்பானிடத்தில் சொல்லி பணம்கொடுத்து அர்ஜனை செய்யச்சொல்வதும் அதாவது உங்களைப் பற்றி என்னிடத்தில் சிபார்சு செய்யச்சொல்வதும் அறிமுகப்படுத்தி வைப்பதும், எவ்வளவு முட்டாள்தனமென்பது யோஜித்துப்பாருங்கள். நீங்கள் என்னை விக்ரஹமென்றும் உங்கள் கண்ணுக்குத் தெரியாமல் மேல் உலகத்தில் இருப்பவனென்றும் ஏமாந்து விடாதீர்கள். நான் அன்பும் சமத்துவமாய் இருக்கிறேன். சமத்துவத்திற்கும் அன்பிற்கும் உழைப்பவன் என்னை உண்மையாய்பூஜிப்பவன். அன்பிற்கும் சமத்துவத்திற்கும் விரோதமாயிருந்துகொண்டு என்னை

(கடவுளை) பூஜிப்பவன் எனக்குநேர்விரோதி. என் (கடவுள்) பெயரைக் கொண்டுவந்து உங்களுக்குக் காட்டி உங்களை ஏமாற்றவும், அடிமைப்படுத்தவும் வந்தவன் அயோக்கியர்களில் முதல் நெம்பர் பேர்வழி என்று தெரிந்து கொள்ளுங்கள்.

துறவிகள் கடவுள் விரோதிகள்.

இத்துறவிகளது தன்மை எவ்விதமென்றால், "ஒரு பெண்ஜாதிவேண்டாமென்று கொள்வார் சந்நியாசம் ஊரி லுள்ள பெண்கள் மீதெல்லாம் நேசம் பசியில்லாதபோதுப வாசம் பசிவந்தால் ஒருபானை பருக்கையும் நாசம், புண்ணி யம்போல் பாவம்" என்பதும், "ஊரெல்லாம் பெண்டாட்டி அவன் வேதாந்தி நித்ய பிரமச்சாரி, நாளுக்கு நாலுவேளை சாப்பிட்டவன் நித்ய உபவாசி, தானே பிர்ம்மமாய் மன தைப்பிரித்து நிற்கின்ற சாது" என்ன செய்தாலும் தன்னை சாருது என்ற சொல்லைச் சொல்லிக்கொண்டு செய்யாத அக் கிரமங்களைச் செய்கின்ற உத்திராட்சப் பூனைகள் என்பதும் தெரியவேண்டியது. தன்னை மறந்து யாராவது ஒரு காரி யத்தைச் செய்யமுடியுமா? மனதே அழிந்த நிலைமையில் காரியம் என்பது எங்கு இருக்கும்? மனதை அழித்த ஞானி உபதேசம் செய்ய முடியுமா? உலகம் கண்ணுக்குப் புலப்படுயா? எல்லாம் ஒரே ஜோதியாயல்லவா தோன்ற வேண்டும்? பணக்காரன் வீடு தெரிந்து வரமுடியுமா? இவ னுக்கே உலகம் அனித்தியமாய் விட்டதே, அனித்தியமான உலகத்திலிருக்கும் மனிதர்களிடத்தில் என்ன பேச்சு? இவ னுக்கு எதுக்குப் பணம்? வசூல்செய்வதற்கு நோட்டுப் புஸ்தகம் எதுக்கு? அனித்தியமான உலகத்தில் என் மடம் கட்டுகிறுன்? அந்த மடம் அனித்தியமல்லவா? நித்திய மென்று அவன் சொல்லமுடியுமா? அனித்தியமான மடத் தைக்கட்டுவதற்கு அவன் என் இவ்வளவு பிரயாசை எடுத்

துக்கொள்ள்வேண்டும்? தன்னைப்போலுள்ள சோம்பேரிகளுக்கு இடவசதி செய்கிருனு? அம்மடத்தில் சுரங்கம் வைத்து வைப்பாட்டிகளை தருவித்துக் கொள்வதற்கா? அவர்களால் ஜனங்களுக்கு என்ன பிரயோஜனம்? காலாகாலத்தில் மழைபெய்யச் செய்கிருனு? அப்படியானல் பஞ்சத்தால் கஷ்டப்படும் காங்கய நாட்டில் ஏன் மழைபெய்யச் செய்யவில்லை. கொஞ்சம் ஏமாந்தால் வீட்டுப் பெண்களின் மேல் பாய்ந்து கற்பை அழிப்பானே ஏன் நம்பி வீட்டிற்குள் விடுகிறீர்கள்? உங்களுக்கு மண்டையில் களிமண்ணு மூளையா அல்லது மூளையிருந்ததை விற்று விட்டீர்களா? திருக்கூட்டத்திற்குச் சாப்பாடுபோடும் பக்திமான்களே! சாமியார்களுக்கு சாப்பாடுபோட்டு வழிச்சிலவிற்குக்கொடுக்கும் புத்திமான்களே! மடம், குருபூஜை முதலியவைகளுக்கு வரிகொடுக்கும் பணக்காரர்களே! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

நீங்கள் தர்மம் செய்யவேண்டுமானல், உங்கள் பொருளை நல்வழியில் செலவிடவேண்டுமானல், தானத்தில் சிறந்ததும், அன்னதானமே பிரதானமென்று தெரிந்ததுமான அன்னதானத்தை தடிச்சாமியார்களுக்கும், கஞ்சா குடியர்களுக்கும், விதவை என்போர்களை வேட்டையாடுபவர்களுக்கும், ஏமாந்தால் வட்டல் செம்பு முதலியவைகளை அடித்துக் கொண்டுபோகும் திருடர்களுக்கும், முடிச்சவிக்கிகளுக்கும், குடிகார சாமியார்களுக்கும், உலகத்தை அநித்தியம் என்று ஏமாற்றும் காயாச வேடதாரிகளுக்கும் செய்யாமல் பசியின்

கொடுமையால் கஷ்டப்படுவர்களுக்கும், கூன். குருடு முதலி யவர்களுக்கும் செய்யுங்கள். நம்முடைய கடவுள் உண் மையான கடவுளாயிருந்தால் கூன், குருடு முதலியவர் களுக்கு சாதம் போட்டவர்களிடத்தில் அன்பு காட்டுவார்.

இன்னும் உங்களுக்கு தர்மம் செய்யப்பிரியமிருந்தால் அர்த்தமற்ற கும்பாபிஷேகங்களுக்கும், பிராமண போஜனத் திற்கும் சிலவு செய்யாமல், அதாவது ஏற்கனவே ஊரார் பணத்தை ஏமாற்றித் தின்று கொழுத்திருக்கும் பிராமண னுக்கு சாப்பாடு போடாமல், "எண்ணும் எழுத்தும் இரு கண்ணெனத் தகும்" என்று சொன்ன பெரியார்களின் சொற்களை ஆராய்ந்து, கல்விக்காகச் செலவு செய்யுங்கள். அதாவது ஏழை மாணவர்களுக்கு இலவச சம்பளம் கொடுங் கள். ஒரு குருடனுக்கு வெளிச்சத்தைக் கொடுத்தால் எவ் வளவு தர்மமோ அவ்வளவு தர்மம் கல்விக்குச் செலவு செய் தால் உண்டு என்று சொல்ல வேண்டுமா என்று கேட் கிறேன். நீங்களே கொஞ்சநேரம் பகுத்தறிவிற்கு இடம் கொடுத்து யோசித்துப் பார்த்தால் உங்களுக்கே விளங்கி விடும்.

இப்பொழுது நான் கீழே சொல்லப்போகும் விஷயம் மிகவும் நுட்பமாக யோசித்துப் பார்க்கும்படி உங்களை நமஸ் காரம் செய்து கேட்டுக்கொள்கிறேன். நான் எழுதுவது காரணத்தோடு எழுதுகிறேனா, நான் சொல்வது நியாயமா அல்லவா அல்லது நான் குறிப்பிடுவதில் குற்றமிருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள். குற்றமாயிருந்தால் தள்ளி

விடுங்கள். ஆனால் நீங்கள் யோசித்துப் பார்க்கும்போது நடுநிலைமையிலிருந்துகொண்டு யோசித்துப்பார்க்கும்படி மறு படியும் உங்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கனவான்களே! நீங்கள் நல்ல சாமியார்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்று கேட்கலாம். அதற்கு நான் சொல்லுவது என்ன வென்றால் நல்ல சுவாமியார்கள் உங்க ளிடத்தில் வரமாட்டார்கள். அரூபியாகிய கடவுளை தியா னித்துக்கொண்டு ஜோதியோடு ஜோதியாய் இருப்பவனுக்கு ஒன்றும் கண்ணுக்கே புலப்படாதே. மாயையாகிய உலகம் அவனுக்குத் தோன்றாமலிருக்கும்பொழுது அதிலுள்ள நீங் கள் எப்படி அவனுக்குத் தெரியும். பணமே பொய், உல கமே பொய் என்பவன், பொய்யாகிய பணத்தைக்கேட்டால் அயோக்கியன் கேப்பமாரி என்று நீங்கள்தெரிந்துகொள்ளக் கூடாதா? எல்லோருக்கும் பணம் அனித்தியம் என்று போதித்துவிட்டு, அவன் பணம் கேட்டால் அனித்தியமான பணத்தை நீங்கள் வாங்கிக்கொண்டுபோய்த்தான் என்ன செய்யப்போகிறீர்கள் இருந்த இடத்திலேயே இருக்கட்டும் என்று புத்திசாலித்தனமாக பதில் சொல்லுங்கள் என்று இப்பொழுது எழுதிக்கேட்டுக்கொள்கிறேன். நானே நேரி லிருப்பேனாகில் காலில் விழுந்தாவது கேட்டுக்கொள்வேன். நான் இவ்வளவு ஆத்திரத்தோடு கேட்டுக்கொள்வது உங்கள் பணம்சிலவாய்விடுகிறது என்று மனவருத்தப்படுகிறது மாத் திரமல்ல, உங்களை முட்டாளாக்கிவிட்டு பணம் பறித்துக் கொண்டு போகிறார்களே, உங்களை அந்தப்பாவிகள் காலில்

விழும்படிசெய்து ஏமாற்றி உங்களை மடையர்களாக்கிவிட்டு பணத்தை வாங்கிக்கொண்டு போகிறார்களே என்பதுதான் காரணம். உங்கள் பணத்தையும் வாங்கிக்கொண்டு முட்டாள் பட்டம் கட்டிவிட்டுப் போவதென்றால் வயிறு தீப்பற்றி எரியாமலிருக்க முடியுமா?

நாம் தெவசம் கொடுப்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும் என்று தோன்றுகிறது. நாம் கொடுக்கும் அரிசி முதலியவைகளும் நம்முன்னோர்களுக்கு போய்ச்சேருகிறது என்பது எப்பேர்ப்பட்ட புத்திசாலித்தனம். பார்ப்பான் நாம் கொடுப்பதைக் கொண்டுபோய் வீட்டில் சமைத்துச்சாப்பிடுவது நன்றாய்த் தெரிகிறது. பார்ப்பான் வயிற்றில்போன சாதம் மேலுலகத்திலிருக்கும் பிதுருக்களுக்கு எப்படிப் போகும் என்று யோசிக்கக்கூடாதா? அப்படிப் போவதாயிருந்தாலும் அவனும் அவன் குடும்பத்தாரும் சாப்பிட்ட எச்சல் ஏன் போய்ச்சேரவேண்டும்? பிதுருக்களுக்குத் தருவதென்று அவர்களுக்கு தருவதானால் அவர்கள்தான் எங்களுக்கு பிதுருக்களா? அவர்கள்தான் எங்களுக்குத் தகப்பனா? பாட்டனா? அவர்களுக்கா நாம்பிறந்தோம்? இதைப் பார்ப்பான் சும்மாவாவது வாங்கிக்கொண்டுபோகிறானா? நம்மைக் குரங்குகளைப்போலாட்டி வைத்து, அதாவது பூணூலை அப்படிப்போடு, அந்தக்காலை மண்டிபோடு, இந்தக்காலை மண்டிபோடு, காலில் நெடுகவிழுந்து நமஸ்காரம் பண்ணி எடுத்து விநியோகம் செய்துகொள்ளுங்கள் என்று ஆட்டிவைக்கிறானே. அவன் நம் காலில் விழுந்து வாங்கிக்கொண்டு போகட்டுமே, கொடுப்பதையும் கொடுத்துவிட்டு அவன் காலில் நாம் விழுவதா? இதை அறியாமல் பெரிய

வர்கள் போனவழியில் போகிறதென்றல் அதை ஒரு பயித்தியம் என்றேசொல்லவேண்டும். நான் தெவசத்தை நிறுத்தும்படி சொல்லவில்லே. நம்முன்னோர்களை வருஷத்திற்கொருமுறை நினைக்க வேண்டியதுதான். அவர்களுக்கு மரியாதை காட்டவேண்டியதுதான். அதைச் செய்வது நல்ல காரியம்தான். ஆனல் அம்மாதிரி செய்யாமல் பெரியவர்களுடைய புகைப்படத்தையாவது அல்லது ஒரு பிள்ளையார் பிடித்துவைத்து, தளிகைபோட்டு பந்து ஜனங்களை வரவழைத்துதிருப்தியாய் சாப்பிடுங்கள். ஏழைகளுக்கு அன்னமிடுங்கள்.

"இல்லறமல்லது நல்லறமன்று" என்ற பெரியோர் சொல்லேக் கேட்டிருப்பீர்கள். இல்லறமல்லாத துறவறம் நல்ல அறம் அல்ல என்பது விளங்கவில்லேயா. துறவுபூண்ட துறவிகளது கொள்கை நல்ல கொள்கையல்ல என்பதுதெரிந்துங்கூட நீங்கள் ஏன் துறவிகளுக்கு உதவுகிறீர்கள்?

துறவிகள் இந்த அழகான உலகத்தை மாயை என்றும் பெண்களே மாயையான பேய்கள் என்றும் தள்ளி விடுவதாகவும், இவைகள் அவர்கள் மோட்சத்திற்குப்போவதை தடுக்கிறது, வழிமறிக்கிறது என்று சொல்லுகிறர்கள். அத்துறவிகள் கொள்கை உண்மையாகயிருந்தால் கடவுள் பித்தலாட்டக்காரரும், மனிதர்கள் மோட்சமடைவதற்கு விடாமல் தடுக்கும் கடுநெஞ்சம் படைத்தவருமாய் இருக்கவேண்டுமல்லவா. கடவுள் எங்களே ஏய்ப்பதற்காகவா இவைகளேப் படைத்தார்? அன்பு மயமாயுள்ள கடவுள் இப்படிச்செய்வாரா என்று யோசித்துப் பார்த்தால் அவர்களுடைய அறி

யாமையும் புரட்டும் வெளியாகிவிடும். அநேக வைத்தியர்களும் டாக்டர்களும் அதிக புணர்ச்சியினுலும் புணர்ச்சியில்லாமலிருப்பதாலும் உடம்புக்கு நோய்வரும் என்று தெரிந்திருக்கிறார்கள். அப்படி யிருக்கும்போது பெண்களை வெறுத்து விட்டதாக சொல்லிக்கொள்ளும் சந்நியாசிகளுடைய முறை அவர்களுடைய தப்பிதம், அவர்களுடைய தவறு என்பது விளங்கவில்லையா? ஈக்களும், பல்லிகளும், நாய்களும், பாம்புகளும், குருவிகளும், யானைகளும் சகல ஜந்துக்களும் புணருகிறது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். இன்னொரு விஷயம் சிலருக்குத் தெரிந்திருக்கலாம், சிலருக்குத் தெரியாமலிருக்கலாம். அதாவது பூவினங்களிலும் ஆண்பூ பெண்பூ இருக்கிறது. அந்த ஆண்பூவிற்கும் பெண்பூவிற்கும் புணர்ச்சி ஏற்படுகிறது. இது ஏற்படும்விதம் மிகவும் ஆச்சரியமானது. இதைக் கவனித்தால் கடவுளுடைய நுட்பமான அறிவு நன்றாய்விளங்கும். ஆண்பூவில் மகரந்தப் பொடிகளிருக்கிறது. அந்த ஆண்பூவின் பேரில் வண்டு உட்காருகிறது. அப்பொழுது அந்த வண்டின் கால்களில் ஆண்பூவிலுள்ள மகரந்தப் பொடிகள் ஒட்டிக்கொள்கிறது. பிறகு பெண்பூவில்போய் உட்காருகிறது. அப்பொழுது ஆண்பூவிலிருந்த மகரந்தப்பொடிகள் ஈக்களின் கால்களின் மூலமாக பெண்பூவில் விழுகிறது. அப்பொழுது பெண்பூ கர்ப்பம் தரிக்கிறது. இவைகளை எல்லாம் பெரியோர்கள் ஆராய்ந்துதான் கடவுளே ஆணும் பெண்ணும் மயமாயிருக்கிறார் என்ற உண்மையை அறிந்தார்கள். அவ்வுண்மையை விளக்கிக் காட்டுவதற்காகவேதான் கட

வுள் உருவத்தை ஆணும் பெண்ணும் சேர்ந்த உருவமாக ஆக்கினார்கள். அதுதான் அர்த்தநாரி ஈஸ்வரர் அதாவது பகுதிஆணும் பகுதி பெண்ணுமாயுள்ள ஈஸ்வரர், இடப்பாகத்தில் பார்வதியை வைத்துள்ள ஈஸ்வரர் என்பது விளங்கும். மேலும், ஆண் பெண்ணுடைய புணர்ச்சி உருப்புகளேயும் புணர்ச்சி காலங்களில் உண்டாகும் சம்பவங்களையும், அதன் பொருத்தத்தையும் ஆழ்ந்து நோக்கும்பொழுது கடவுள் படைப்பே புணர்ச்சிக்கு சாதகமாகவும், ஒத்தாசையாகவும் இருக்கிறது என்பதும், கடவுளுடைய கட்டளையும், நோக்கமும், அபிப்பிராயமும் ஆணும் பெண்ணும் புணரவேணடும் என்று இருப்பதாகவும் நன்ருகத்தெரிகிறது. கடவுள் அபிப்பிராயமும் கடவுள் கட்டளையும் அப்படியிருக்க இந்தத் துறவிகள் கடவுள் கட்டளைக்கு மாருக விரோதமாக பெண்களை வெறுக்கிருர்கள். ஆழ்ந்து பார்த்தால் இந்தத் துறவிகள் கடவுள் கட்டளையைமீறி நடப்பவர்கள். ஆகவே இவர்கள் தான் நாஸ்திகர்கள். இவர்கள்தான் பாபிகள். நரகம் என்று ஒன்று இல்லாதிருந்தாலுங்கூட இவர்களுக்காக ஒரு தனிப்பட்ட நரகம் படைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். பொய்யான சந்நியாசி கெட்டவன் என்று நீங்களே ஒத்துக்கொள்வீர்கள். ஆனல் உண்மையான சந்நியாசி பெரியபுத்திசாலி, மஹான் என்றுநினைத்திருப்பீர்கள்.

உண்மையாய்ப் பெண்களை வெறுத்த உண்மையான சந்நியாசி கடவுள் துரோகியாகிருன் என்ருல், பொய்ச் சந்நியாசியான அயோக்கியனையும் ஆதரிக்கக்கூடாது. உண்மை சந்நியாசியான கடவுள் துரோகியையும் நீங்கள் ஆதரிக்கக் கூடாது. அப்படி நீங்கள் ஆதரித்தால் கடவுள் விரோதி

யான உண்மை சந்நியாசிகளுக்கும், கடவுள் துரோகிகளுக்கும் இடங்கொடுத்த குற்றம் உங்களைச்சாரும். இச்சந்நியாசிகள் மோட்சத்திற்குப் போனால் கற்பக விருக்ஷமும், காமதேனுவும் அறுசுவை உண்டி நினைத்த நேரத்திற்குக் கிடைக்குமென்றும் பேராசை வைத்துக்கொண்டு வாயில் ஜலத்தை ஊரவைத்துக்கொண்டிருக்கும் சாப்பாட்டு ராமன்கள்.

துறவிகள் உங்களண்டையில் வந்தால் நீங்கள் அவர்களுக்கு ஓர் தொழில் சம்பாதித்துக்கொடுக்க முடியுமானால் சம்பாதித்துக்கொடுங்கள். ஒன்றும் தெரியாத தடியனாயிருந்தால் விறகு வெட்டச்சொல்லி அதற்குத் தகுந்த கூலி கொடுங்கள். அதுவும் செய்யமாட்டேனென்றால் துறவறம் தப்பான கொள்கை, கடவுள் கட்டளைக்கு விரோதமாயுள்ளது என்று போதியுங்கள். எந்த வேதாந்தத்தில் ஊரார் பணத்தை சாப்பிடும்படி சொல்லியிருக்கிறது என்று கேளுங்கள். எந்த ஞானம் உங்களுக்கு வேலை செய்யாமல் தின்றுகொண்டிருக்கும்படி சொல்லிற்று என்றுகேளுங்கள். தயவு செய்து இந்தவியாசத்தை நன்றாய்ப்படித்துயோசித்துப்பாருங்கள். வேடிக்கையாக எழுதினதென்று நினைத்துக்கொள்ளாதீர்கள். நமது இந்தியாவைக்கெடுத்தது துறவறம். நம்மை இக்கஷ்ட நிலையில் வைத்தது, "உலகம் அனித்தியம்" என்ற சொற்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள். என்றைக்குத் துறவிகள் ஒழிந்தார்களோ அன்றைக்கே நமது அடிமைத்தனமும், கஷ்டமும் ஒழியும் என்பது எனது முடிவு. இந்தியர்களாகிய நாம் உலகத்தை அனித்தியம் என்றோம். நம் சுதந்திரமும் அநித்தியமாய் விட்டது.

நித்தியமான வஸ்து (கடவுள்) எங்கும் இருக்கும்பொழுது இவர்கள் சொல்லும் அனித்தியமான வஸ்துக்கள் எந்த இடத்தில் இருக்க முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி? ஆனால் அனித்தியமே இல்லையா என்று கேட்பார்களாகில், கடவுள் நித்தியமாக இருப்பதும், அக்கடவுள்நீக்கமற நின்றபொருளாய், எங்கும் நிறைகின்ற பொருளாயிருப்பதும் உண்மையாகவிருந்தால் சகலமும் நித்தியமாகத்தான் இருந்து தீரவேண்டும் என்றுதான் சொல்லவேண்டும். அப்படிக்கில்லாமல் நித்தியம், அநித்தியம் என்று பிரிப்பதானால் "அத்துவிதம்" இரண்டல்லாதது என்னும் தன்மையும் அத்துவித ஞான சாஸ்திரமும் பொய்யாகிவிடும். மேலும் நமது ஞானியார் தாயுமானவர், "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்று ஆரம்பித்த பாடலில் நித்தியம், அநித்தியம் இல்லையென்று பொருள்படும்படி பாடியிருப்பதுவும் காண்க.

உண்மையாய்த் துறந்தோர்க்கு வேஷம் வேண்டுவதில்லையென்றும், வேஷம் அவசியமில்லை யென்றும் பெரியோர்களே பாடிவைத்திருக்கிறார்கள். குதம்பைச் சித்தர் பாடல்களிலும், 'வெட்டவெளிதனை மெய்யென்றிருப்பார்க்கு பட்டயம் ஏதுக்கடி' என்பதில் செம்புப்பட்டயம் முதலிய வெளி ஆடம்பரம் அவசியமில்லாதது என்றும், 'காலனை வென்ற கற்றறிவாளர்க்கு கோலங்களேதுக்கடி' என்பதில் சின்னங்களாய விபூதி, உத்ராக்கம், காயாசம் ஏதுக்கு என்றும் பாடியிருப்பது மெச்சத்தக்கது. அதுவுமல்லாமல் துறவிகளது கொள்கை கடவுள் துரோகமானது என்று அநேக

காரணங்களுடன் விளக்கிக் காட்டியிருக்கிறேன். துறவிகளுக்கு ஆதரவளிக்காதீர்கள் என்று மறுபடியும் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மதம்.

மதம் என்பது ஒருகொள்கை. அநேகமாக இவைகள் பெரியோர்களால் மனிதர்களுக்குச் சொல்லப்பட்டு, பலமனிதர்கள் அந்தக் கொள்கைகளை ஒரு மதமாக செய்துகொண்டு அதை அனுசரிக்கிறார்கள்.

இப்பொழுது மதச் சண்டைகள் அதிகமாகவிருக்கிறதென்பது தெரியக்கூடிய விஷயம். பொதுவாக மதவழக்குகள் மத உண்மைகளை அறியாத காரணங்களால் ஏற்படுவதே ஒழிய வேறில்லை. எல்லா மதங்களும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் போதிக்கின்றன. எந்த மனிதனாவது இன்னொரு மனிதனை தன்னைப்போலுள்ள மனிதன், தன்னைப்போல் அவனும் கடவுளுடைய பிள்ளை என்று கருதாமல், அன்னிய மதஸ்தன் என்று எண்ணி முட்டாள்தனமாக மதவெறிகொண்டு அவனைக் கொடுமைப்படுத்துவானாகில் அவன் உலகத்திலுள்ள எந்த நல்ல மதத்தையும் சேர்ந்தவனாகமாட்டான். ஒரு மகமதியனை ஓர் இந்து வெறுப்பானாகில் அவன் உண்மையான இந்துவாகமாட்டான். அதேமாதிரி ஒரு மகமதியன் ஒரு இந்துவை வெறுப்பானாகில்

அவன் உண்மையான மகம்மதியனுகமாட்டான். ஆகை யால் இப்பொழுது இருக்கும் இந்துமுஸ்லிம் வழக்கு மதத் துரோகிகள் வழக்கென்றே சொல்லித்தீரவேண்டியதாயிருக் கிறது. ஏனென்ருல் இஸ்லாத்தை உண்மையாக பின்பற்று கிறவனுக்கும் அன்புமயமாகிய கடவுளைப்பணியும் இந்துவுக் கும் சண்டையுண்டாக இடமில்லை. இருவரும் சகோதரர் கள் மாதிரியல்லவோ இருக்கவேண்டும்.

ஒரு மகமதியன் பசுவின் மாமிசத்தைப் புசித்தால் இந்து என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் ஒருவனுக்கு ஏன் ரத்தம் கொதிக்கவேண்டும்? பசுவின் மாமிசம் அவ னுக்கு ருசியாயிருக்கிறது. அவன் அதைச்சாப்பிடுகிருன். அது அவனுடைய இஷ்டத்தைப் பொருத்தது. அப்படி மகமதியர்களை குறைசொல்லும் இந்துக்கள் கவனிக்கவேண் டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது ராமர் காலத்திலிருந்த வர்கள் அசுவமேதயாகம் செய்துகொண்டிருந்தது யாவரு மறிந்தது. அதில் பசுக்கொலை செய்வதும் தெரிந்தவிஷயம். அக்காலத்தில் எல்லோரும் பசுக்களைக்கொன்று புசித்துவந் தார்களென்பது தெரிந்தும் அக்காலத்திலிருந்தவர்களை ரிஷி களென்றும், முனிகளென்றும், அவதாரங்களென்றும்சொல் லிக்கொண்டு இவர்களைத் தூஷிப்பது புத்தியில்லாத தன்மை யல்லவா?

அதேமாதிரி இந்துக்கள் ராஜவீதியில் கொட்டு முழக் குடன் போனுல் யார் அவர்களை வேண்டாமென்று எப்படி

சொல்லமுடியும்? வீதி எல்லோருக்கும்பொது, அது தனிப் பட்டவருடைய அதிகாரத்திற்கு கட்டுப்படாதது.

இந்துக்களுக்கு பசுக்கொலையைப் பார்க்கமுடியாவிட் டால் பசுக்கொலை நடக்கும் இடத்திற்கு போகாமலிருந்து கொள்ளட்டும். அப்படி ஒருசமயம் தெரியாமல் போய்விட் டால் கண்ணைமூடிக்கொண்டு திரும்பிவந்துவிட வேண்டி யதே தவிர அவர்களோடு சண்டைக்குப் போகவாவது, அதைத்தடுக்க முயற்சி செய்வதாவது முட்டாள்தனமும் மத வைத்தியமும் என்றே சொல்லுவேன்.

இதைப்போலவே இந்துக்களுடைய கொட்டுமுழக்கு சப்தம் மகம்மதியர்களுடைய தெய்வ பிரார்த்தனையைக் கெடுக்குமானால் அவர்கள் தெய்வ பிரார்த்தனை ஸ்தலங்களை சப்தமில்லாத இடத்தில், சப்தம் வரமுடியாத இடத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது.

அப்படிக்கில்லாமல் ஒருவனுடைய அபிப்பிராயத்தை ஒட்டி உலகத்தை நடக்கச்செய்யவேண்டுமென்று வற்புறுத் துவதும், ஒருவனுடைய இஷ்டத்திற்குத் தகுந்தபடி உல கத்தை நடக்கும்படி கண்டிப்பதும், அதற்காக சண்டை செய்வதும், கடுஞ்சித்தமும், ரத்த முறுக்கும் என்றே சொல் வேன். வெளியே குளிர் காற்று வீசினால் நாம் கம்பளியை போர்த்துக்கொள்ள வேண்டியதே தவிர குளிர்காற்றை உஷ் ணக்காற்று செய்யமுடியுமா? உதாரணமாக சப்தமில்லாத தனிப்பட்ட இடத்தில் தொழும்படியான மனிதனை எடுத்

துக்கொள்வோம். இப்பேர்ப்பட்ட மனிதன் தனக்கு தனி ஜாகா தேடிக்கொள்ள வேண்டியதைவிட்டுவிட்டு ஓர் சந்தை கூட்டத்தில் வந்து நின்றுகொண்டு எல்லோரையும் சப்தம் போடக்கூடாது என்று கட்டளையிடுவது புத்திசாலித்தன மாகுமா? நியாயமாகுமா என்று யோசித்துப்பாருங்கள். இனியோர் மனிதன்தான் ஒருவர் முகத்தையும் பார்க்கக் கூடாது என்ற கொள்கையை யுடையவன். இப்பேர்ப்பட் டவன் செய்யவேண்டிய வேலை என்ன? இவன் ஓர் மனித சஞ்சாரமில்லாத காட்டிற்கு ஓடிப்போய்விடுவதை விட்டு விட்டு ஒரு பொது ரஸ்தாவில் வந்து நின்றுகொண்டு அதில் நடக்கும் ஜனங்களை அவர்கள் முகங்களை வஸ்திரங்களால் மூடிக்கொண்டு போகவேண்டுமென்றும், தனக்கு ஒருவர் முகத்தையும் பார்க்க இஷ்டமில்லை என்றும் சொல்லிக் கொண்டு, ஜனங்களிடத்தில் சண்டைக்கு வந்தானானல் எப் பேர்ப்பட்ட வடிகட்டின மடையனாயிருக்கவேண்டுமென்று யூகித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆதலால் ஒவ்வொரு மதஸ்தனும் பொது இடங்களில் தன் மத ஆணையைச் செலுத்துவதை மறந்துவிட்டு மதவில லங்கங்களுக்கு பிரத்தியேகமாய் இடவசதி செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அம்மாதிரி செய் யாமல் உங்கள் மதக்கொள்கைகளுக்கு உலகத்தைக் கட்டுப் படுத்த பலுவந்தப்படுத்த நினைத்தால், இரவில் சூரியனைவரச் சொல்லி கட்டளையிட்ட அந்த மகா புத்திசாலிக்கும் உங்க

களுக்கும் வித்தியாசமிருப்பதாக நான் யோசித்தமட்டில் எனக்குத்தெரியவில்லை.

இந்து முஸ்லீம் சண்டையை மதத்துரோகிகள் சண்டையென்று குறிப்பிட்டதற்கு போதிய காரணத்தைக்காட்டியிருக்கின்றேன். எல்லாமதங்களும், மனிதர்கள் எல்லோரும் கடவுள் குழந்தைகள் என்றும், சகோதரர்கள் என்றும், எல்லோரும் ஒருவரோடொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றும் போதித்திருக்க மதச்சண்டைகள் அர்த்தமற்றதல்லவா? எல்லா மதஸ்தரும் உண்மையான, அடிப்படையான மதக்கொள்கைகளை மறந்துவிட்டார்கள் என்று சொல்லவேண்டிய அவசியமிருக்கிறதா? எல்லோரையும் ஒற்றுமைசெய்யும் கருத்தைக்கொண்டு, பெரியோர்களால் தோற்றுவித்த மதமானது இப்பொழுது மனிதருக்குள் சண்டைகளும், பிளவுகளும், கொலைகளும் உண்டாவதற்கு காரணங்களாய் விட்டது. ஏனென்றால் மதப்பற்றுள்ளவர் மதஉண்மைகளையும், அதன் நோக்கத்தையும் அறியாமல், சிலர் நாமக்குறிகளிலும், சிலர் விபூதி அணிவதிலும், சிலர் தாடிகளின் நீளங்களை அளந்து பார்த்துக் கொண்டிருப்பதிலும், சிலர் ஞாயிற்றுக்கிழமை யன்றைக்கு நல்ல ஆடைகள் தரித்துக் கொண்டு சர்ச்சுக்குப்போவதிலும் மதத்தை முடித்துவிட்டார்கள். மதங்களின் முடிவையும் பார்க்கப் போகிறார்கள். மனிதன் வாழ்க்கைக்கு பகுத்தறிவை தடைசெய்து, நம்பிக்கையையே மேற்கொண்டுள்ள மதம் அவசியமாயிருந்தகாலம் மலையேறிவிட்டது என்பதும் தெரிந்துகொள்ளப் போகிறார்கள்.

என் மதங்களினுடைய கதி அதோகதியானதற்கு மதக்கட்டுப்பாடு மனிதர்களை மிகவும் அடிமையாக்குவதாயும், மனிதன் சுதந்திரத்திற்கு ஹானியாயுமிருப்பதுதான் காரணம் என்று சொல்லுவேன். இன்னும் என்ன காரணமாயிருக்கலாம் என்று ஆராய்ந்து பார்த்தால் இந்த மதங்களுக்கு ஆதாரமாயுள்ள வேதங்களை அவ்வம்மதத்திற் சேர்ந்த ஒவ்வொருவரும் தனது பகுத்தறிவால் தர்க்கிக்கக்கூடாது என்ற கொள்கைதான் முக்கியமாய் சொல்லவேண்டும். எப்படியென்றால் மனிதனையும் மிருகத்தையும் பிரிப்பது பகுத்தறிவு. மனிதனை மிருகங்களைவிட மேன்மையாகவும் விசேஷமாகவும் சொல்வதும், மனிதனுக்கு பகுத்தறிவு இருப்பதின் முன்னிட்டே என்று நான் எழுதவேண்டிய அவசியமில்லை. ஆகையால் மனிதனை மேன்மையாக்குவதும் மனிதனை மனிதனாக்குவதும் பகுத்தறிவு. அவ்வளவு மேன்மை தங்கிய பகுத்தறிவையும், அத்யாவசியமான பகுத்தறிவையும் மனிதன் உபயோகப்படுத்தி அவ்வவ்வேதங்களின் உண்மையை ஆராய்ந்துபார்க்கவும், அதனோடு தர்க்கிக்கவும் மறுக்கும் வேதங்களும் மதங்களும் மனிதனை அடிமைப்படுத்துகிறதல்லவா? மனிதனை மனிதத்தன்மையிலிருந்து, பகுத்தறிவில்லாத அல்லது பகுத்தறிவு இருந்தும் உபயோகப்படுத்த முடியாத மிருகத்தன்மையை உண்டாக்கி விடுகிறதல்லவா? யாதாவது ஒரு மதம் அல்லது வேதம் ஒரு மனிதனை விலங்காக்குமானால் அந்த மதத்தை ஒப்புக்கொள்ள முடியுமா? யாதாவது ஒருவேதம் ஒருசாராருக்கு படிக்க உரிமையளிக்கவில்லையானால் அந்த மதத்தை பின்பற்ற முடியுமா? இந்து

மதத்தினர் வேதத்தை சூத்திரர்கள் படிக்கக்கூடாது என்றது மனு அநீதியல்லவா? அதற்கு பார்ப்பனர்களின் சூழ்ச்சியல்லவாகாரணம்? இப்படிப் பகுத்தறிவை இழந்து மிருகங்களைப்போலாகி ஒருவரோடொருவர் சண்டைசெய்து கொள்வது பிரத்தியட்ச அனுபவமல்லவா? ஆனால் மதப் பைத்தியம்கொண்டு தங்களை மிருகங்களாக்கிக் கொண்டவர்கள் தங்கள் வேதம் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லுவார்களேயானால், "நீங்கள் சொல்லுவது வேதவாக்கா?" என்று சொல்வதில் தத்துவமென்ன? வேதவாக்கை ஒருவரும் மறுக்கக்கூடாது என்பதும், வேதத்தை அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதும், அதனுடைய கருத்தல்லவா என்று கேட்கின்றேன்.

இன்னும் அநேக மதஸ்தர்கள் தங்கள் வேதம் கடவுள் சொன்னதென்றும், கடவுள் அனுப்பிய தூதுவன் சொன்னதென்றும் கடவுள் அவதாரங்கள் சொன்னதென்றும் சொல்வதும், அவைகளை தர்க்கிக்கக்கூடாதென்றும் சந்தேகங் கொண்டாலுங்கூட பாவமென்றும், நரகவேதனை அனுபவிப்பார்களென்று சொல்லுவதும், பயமுறுத்துவதும், பகுத்தறிவை தடைசெய்வதல்லவா? மனிதனை மிருகமாக்குவதல்லவா? ஆதலால் இப்பேர்ப்பட்ட அநியாய மதங்களை விட்டுவிலகிவிட்டுத்தான் வேறுவேலை பார்க்கவேண்டுமென்று நான் உங்களை வணங்கிக்கேட்டுக் கொள்கிறேன், நீங்களே நன்றாய் யோசித்துப் பாருங்கள். மதம் பகுத்தறிவை தடைசெய்கிறது என்று நான் சொன்னமாதிரி இருந்தால், நான் சொன்னது உண்மையானால் நீங்கள் மதத்தை விட்டு விலகிவிடுவதற்கு என் மயங்கவேண்டும்? என் தாம

தம் செய்யவேண்டும்? நமக்கென்ன என்று நீங்கள் ஏமாந்திருப்பீர்களானால் உங்கள் குழந்தைகள் கைகளிலும் கால்களிலும் மதவிலங்கு பூட்டிக்கொள்ளும் என்பதைத் தெரிந்தும் நீங்கள் அதில் இருப்பீர்களானால் உங்களுக்கு என்னுடைய பரிதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். யானை தன்தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொள்கிற மாதிரி நீங்கள் உங்கள் அறிவை மதத்தினிடத்தில் கொடுத்துவிட்டு சுத்தசூன்யமாயிருக் கின்றீர்கள். அதாவது மதம் சொல்வதின்படி நடக்கிறவர்களாயிருக்கின்றீர்கள். மதம் தோப்புக்கரணம் போட்டால் மோட்சமென்று சொல்லுமானால், உடனே எண்ணிக்கொள் என்று இருகாதுகளையும் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்திருக்கிறீர்கள். இப்படிப் பழக்கப்பட்ட மனிதர்கள், காசியில் மோட்சமென்றால் அங்கு ஓடுவார்கள். புதிதாக கல்யாணமாகிய பெண்ணை முதன்முதலில் பார்ப்பானோடு புணரவிட்டால் மோட்சம் என்று ஒருபுராணம் எழுதிவைத்தால், பார்ப்பானுக்கழைப்பு வந்துவிடும். இப்படி அழைப்பு வந்துமிருப்பதாகவும், மலையாளத்தில் நடந்துகொண்டிருந்ததாகவும், இப்பவும்கொஞ்சமிடங்களில் நடப்பதாகவும் சொல்லுகிறார்கள். மனிதர்கள் இவ்வளவு முட்டாள்கள் ஆவதற்கு காரணம் மதநம்பிக்கையும், மோட்சத்தின் பேரில் ஆசையுந்தான் என்று யாராவது சொல்லித் தெரியவேண்டுமா என்று கேட்கின்றேன்.

ஆதலால் நீங்களெல்லோரும் மதவிலங்கினால் கட்டுப்பட்டு, விலங்காவதை விட, மத விலங்கை உடைத்தெறிந்துவிட்டு பகுத்தறிவுள்ள மனிதனாக வேண்டுமென்றும், நாம்

எல்லோரும் தெய்வத் தன்மை பொருந்தியவர்களென்பதை உணர்ந்து நாம் எல்லோரும் சகோதரர் என்று எண்ணி மதச் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு சுதந்திர உலகத்தில் வந்து சுகவாழ்வுபெறவேண்டுமென்று உங்களை நான் மன்றுடிக்கேட்டுக் கொள்கிறேன்.

மதமென்பது மோட்சத்தைக் காட்டி மனிதர்களைப் பிடிக்கும் எடால். பரலோக நம்பிக்கையும் ஜென்மங்களையும் கொண்ட மத எடாலில் விழுந்துவிட்டால், அறிவை நசுக்கிவிடும்.

ஏமாறுதீர்கள்.!



மறுபிறப்பும், கர்மமும் உண்டா?

இந்து மதஸ்தர்கள் ஜன்மங்கள் உண்டென்றும் முன் ஜன்மத்தில் செய்தவினைக்குத் தகுந்தபடி இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறார்கள், என்றும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றி நான் யோசித்தமட்டில் எனக்குத் தோன்றியதையும், என்னுடைய அபிப்பிராயத்தையும் எடுத்துச் சொல்ல பிரியப்படுகிறேன். தயவு செய்து யோசித்துப் பாருங்கள். நான் சொல்லுவதுதான்சரி, நான் சொல்லும மாதிரிதான் இறந்தபின் நடக்கும், பிறப்பதற்கு முன் நடந்திருக்கும் என்று நானும் நிச்சயமாய் சொல்ல முடியாது, யாரும்உறுதிப்படுத்த முடியாது. ஆனால் அவரவர்கள் அபிப்பிராயங்களைச் சொல்லலாம். இப்பொழுது நான் கீழேசொல்லுவதை பாரபட்ச மில்லாமல் நடுநிலையிலிருந்து யோசித்துப்பாருங்கள். இந்த ஜன்மத்தில் ஒருவன் சுகமடைவது கஷ்டப்படுவது ஒருநல்லகாரியம்செய்வது கெட்டகாரியம் செய்வது, இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் இதற்கு முன் ஜென்மத்தில் செய்த வினையின் பயன், கர்மம், போன ஜன்மத்தில் என்ன நடந்ததோ அதற்கு தகுந்த மாதிரிதானே நடக்கும் என்று சொல்லுகிறார்கள். ஒருவனுக்கு சீக்கு வந்து கஷ்டப்பட்டால் முன் ஜென்மத்தில் என்ன செய்தானோ என்று சொல்லுவதும், இறந்து விட்டால் காலம் தீர்ந்து விட்டது என்பதுவும்ஒருவன் மற்றொருவனால்கொலையுண்டு போய்விட்டால், அவன் அவன் கையில் இறக்க வேண்டுமென்றிருந்தால் விட்டுப்போய் விடுமா, தலையெழுத்து அவ்

வளவுதான், எமன் மற்றொருவன் மூலமாக அவன் உயிரைக்கொண்டு போகவேண்டுமென்றிருக்கிறது, அவனுக்கு ஆயுள் முடிந்து விட்டது, யாரையும் நொந்து கொள்வதில் பிரயோஜனமில்லை என்பதையும் ஆராய்ந்து பார்ப்போம். ஒருவன் பணக்காரனாய் பிறந்தால் முன் ஜன்மத்தில் எல்லோருக்கும் தர்மம் கொடுத்ததினால் இந்த ஜென்மத்தில் அந்த சொத்துக்களெல்லாம் இவனுக்கே கடவுள் கொடுத்தார் என்பதாகும். அதேமாதிரி இந்த ஜென்மத்தில் ஒரு மனிதன் மற்றொருவன் பணத்தை மோசம் பண்ணினால், போன ஜென்மத்தில் இப்போழுது மோசம் பண்ணினவனிடத்தில் ஏமாந்து போனவன் மோசம் பண்ணியிருப்பான் அதனால் தான் இந்த ஜன்மத்தில் இவன் அவன் பணத்தை மோசம் பண்ணினான் என்று சொல்லுவது பொருந்தும். ஆகையால் இந்த ஜென்மத்தில் ஒருவரை ஒருவர் மோசம் பண்ணுவதும் ஏமாற்றுவதும் போன ஜன்மத்தின் பயன், இவனை அவன் மோசம் பண்ண வேண்டுமென்றும், அவன் இவனால் மோசம் போகவேண்டுமென்றும் விதித்திருந்தால், தலை எழுத்து அப்படியிருக்குமானால், அம்மாதிரி நடந்துதான் தீரும் என்னும் நம்பிக்கையுடையவர்கள் மோசம் பண்ணினவன் பேரில் குற்றம்சொல்ல முடியாது. தலைவிதிப்பிரகாரம் நடப்பதற்கு அம்மனிதன் என்ன செய்வான்? விதியை வெல்லமுடியுமா? அவ்விதிப்பிரகாரம் அவன் இன்னொருவனை மோசம்செய்யாமலிருக்க முடியுமாஎன்று யோசித்துப் பாருங்கள் ஆகையால் மோசம்செய்வதின்பேரில் யாதொரு குற்றமுமில்லை. தலைவிதிப்பிரகாரம்நடப்பதற்கு அவன் என்ன செய்வான் என்று சொல்லுவது நியாயமாகும், தலை விதியை

நப்புகிறவர்கள் இதை ஆக்ஷேபிக்க முடியாது, காரணத்தோடு பேசினல் இதை ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. ஒருவன் இன்னெருவனல் கொலையுண்டு போக வேண்டுமென்று இருந்தால் கர்மம் அப்படியிருக்குமானல் தலைவிதி அவ்விதமிருக்குமானல் கொலை செய்தவன் பேரில் குற்றம் சொல்லுவதற்கு யாதொரு நியாயமான காரணமுமில்லை. கொலை செய்தவன் கொலை செய்யக் கூடாதென்று எண்ணியிருந்தாலுங்கூட, விதி அப்படியிருந்தால் கொலை செய்தே தீருவான் என்று விதியை நம்பினவர்கள் ஒப்புக்கொள்வார்கள். அப்படியானல் கொலை செய்தவனுங்கூட குற்றவாளியல்ல என்று அவர்கள் ஒப்புக்கொண்டு தீர வேண்டியதைத் தவிற வேறு வழியில்லை. இதை அவர்களிடத்தில் கேட்கும்போது பதில் சொல்லத்தெரியாமல் கோபித்துக் கொள்வார்களேஒழிய நியாயம்மெய்ப்பிக்க அவர்களால் முடியாது, பிறகு கோபத்தோடு, ஒருவன் நன்ருய் பிறப்பதற்கும், மற்றெருவன் கூன், குருடாய் பிறப்பதற்கும் என்ன காரணம் என்று, கண்டபடி பிதற்றுவதற்காரம்பித்து விடுவார்கள். என் ஏழையாக ஒருவன் பணக்காரனக ஒருவன் பிறக்கிருன் என்றுங்கேட்பார்கள். ஒருவன் கூன், குருடாய்பிறப்பதற்கு அவன் தகப்பனருடைய வீரியத்தின் பிசகு, வீரியத்தில் சீக்கிருக்கும் என்பது தெரியக்கூடியவிஷயம். ஒரே தகப்பனருக்கு எல்லா குழந்தைகளும் நன்ருய்பிறக்கிறது ஒருகுழந்தை மாத்திரம் ஏன் குருடாய் பிறக்கிறது என்றும் கேட்பார்கள். அதற்கு நான் சொல்லும் பதில் என்னவென்ருல் மற்றகுழந்தைகள் பிறக்கும்போது தகப்பனர் உடம்பில் சீக்கில்லை அக்குருட்டுக் குழந்தை பிறக்கும்போது சீக்கிருந்திருக்கும்.

வெள்ளை, வெட்டை முதலிய வியாதிகளுள்ளவர்களுக்கு சகஜமாக குழந்தைகள் பிறந்தால் கண் வெளிச்சமில்லாமல் பிறக்கிறது என்பதை டாக்டர்கள் அறிந்திருக்கிறார்கள். கூன், மொண்டி, முடவன் முதலிய அங்க ஊனங்கள் ஏற்படுவதற்கு காரணம் நம் முன்னோர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். கெற்பவதிகளை ஐந்துமாதத்திற்கு மேல், தூங்கும் போழுது எழுப்பக்கூடாது என்று நம்பெரியோர்கள் சொல்லுவதின் கருத்தை எல்லோரிடத்திலும் விசாரித்துபாருங்கள் நீங்களே தெரிந்துகொள்ளலாம். அதாவது 5 மாதங்களுக்கு மேல்தான் குழந்தைகளுக்கு அங்கங்கள் தெளிவாக உண்டாகிறது, அதுவும் அந்த கெர்ப்ப ஸ்திரீகள் நித்திரை செய்யும் பொழுது அவ்வுரு கூடுமாம். அச்சமயத்தில் திடீரென்று அவர்களை எழுப்பினால் அங்க ஊனம் ஏற்படும் என்பது தான் அதன் கருத்து. அங்க ஊனங்களாய் பிறப்பு உண்டாவதற்கு முன் ஜென்மங்கள் காரணம் என்று சொல்லி முன் ஜென்மத்தை கற்பித்து அதிலிருந்து ஜென்மங்கள் உண்டென்பதை நம்புவது எத்தகைய குற்றம். ஏழை, பணக்காரன் விஷயமாக பேசுவர்களேயானால் ருஷியா தேசத்தில் ஏழை, பணக்காரன் கிடையாது என்கிறார்களே, அதற்கு என்ன பதில் அவர்கள் சொல்லக்கூடும். அவர்கள் எல்லோரும் போன ஜன்மத்தில் ஒரே மாதிரி கர்மம் செய்தார்களா என்று கேட்கிறேன்.

மேலும் போன ஜன்மத்திற்குத் தகுந்த பிரகாரம் இந்த ஜன்மத்தில் அனுபோகிக்கிறோம், இந்த ஜன்மத்தில் செய்யும் காரியங்களுக்கு போன ஜன்மம் ஆதாரம், என்றால் போன

ஜன்மத்தில் செய்த காரியங்களுக்கு எந்த ஜன்மம் ஆதாரம். அதற்கு முந்தின ஜன்மம் ஆதாரம் என்றால் அந்த ஜன்மத்தில் செய்ததற்கு அதற்கு முந்தின ஜென்மம், இப்படியே போனால் இந்த ஜென்மத்தில் நாம் செய்யும் காரிங்களுக்கும் இனிமேல் நாம் செய்யும் காரியங்களுக்கும் காரணமாயுள்ளது ஆதாரமாயுள்ளது; எல்லாவற்றிற்கும் முதலில், அதாவது முதன் முதலில், முதலிலெடுத்த ஜென்மத்தில் செய்த கர்மமே காரணம்என்று சொல்லவேண்டும் வேறுவழியில்லை. முதன் முதலில் பிறந்தவன் ஏன் கர்மம் செய்தான், எப்படி கர்மம்செய்தான் எப்பொழுது கர்மம்செய்தான், எந்தகர்மத்தின் பொருட்டு ஜென்மமெடுத்தான் என்று யோசித்துப் பார்த்தால் அவர்களுடைய அறியாமை வெளியாகிவிடும். கர்மம்என்பது பொய் என்று விளங்கிவிடும். இந்தக்கேள்வி கேட்டுவிட்டால் சரியான பதில் சொல்ல முடியாமல் மரம் முதலில் உண்டாயிற்று வித்து முதலிலுண்டாயிற்று என்னும் கேள்வியை கேட்டு ஏமாற்றப் பார்ப்பார்கள் இந்தக் கேள்வி அவர்கள் கேட்டவுடன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் பக்திமான்களுக்கு சிரிப்பு வந்து விடும். அவர்கள் வாதத்தில் வென்று விட்டார்கள் என்று திருப்தி அடைந்து கொள்வார்கள். வித்து முன்பா, மரம்முன்பா என்னும் கேள்விக்கு அவர்களே பதில் சொல்ல முடியாது என்பது அவர்களுக்கே தெரியும். இது நிற்க.

ஏதோ நான் என் சிற்றறிவுக்கெட்டின மட்டில் யோசித்து மறு பிறப்பில்லை என்பதாக ஒருவாறு தெளிவுற்றேன்.

அதற்குப் போதிய காரணங்களையும் எடுத்துக் காட்டியுள்ளேன். இதைப்பற்றி விரிவாக பின்வரும் வியாசங்களில் குறிப்பிடுகின்றேன். ஆனால் நீங்கள் ஒரு சந்தேகங்கொள்ளலாம். அதாவது என்னவென்றால் நம்முன்னோர்கள் எல்லாம் மறுபிறப்பு உண்டென்று நம்பியிருக்க, நான் இதற்கு மாறுபாடாகக்கூறுவது தவறாய்த்தான் இருக்கும் என்று முடிவுசெய்யுமுன், நம்முன்னோர்களிலும் சிலர், பெரிய அறிவாளி என்று கருதப்படும் சிவவாக்கியர் மறுபிறப்பு இல்லை, இல்லை, இல்லை, இல்லையே என்று நான்குமுறை இல்லை என்று அழுத்தமாகக் கூறியிருப்பது யாவரும் அறியக்கிடக்கின்றது. அவர் பாடியதாவது,

கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணை
மோர்புகா உடைந்துபோன சங்கி னோசை
உயிர்களும் உடற்புகா இறந்தவர் பிறப்ப
தில்லை யில்லை யில்லை யில்லையே.

(கருத்துரை) இறந்தவர்கள் பிழைக்க மாட்டார்கள். கண்டிப்பாய் மறுபிறப்புக் கிடையாது.

இது விஷயத்தைப்பற்றி நன்றாய் யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை கேட்டுக்கொள்வதுமன்றி இறந்தபின் என்னவாகிறது என்று யோசித்துத் துன்பப்படுவதை விட்டுவிட்டு இருக்கும்வரை அன்போடு நல்லகாரியங்களைச்செய்துவிட்டுப்போகலாம் என்ற கொள்கையோடிருப்பது சாலவும் நன்று என்பதை ஞாபகமூட்டுகிறேன்.

இனி என்னுடைய அபிப்பிராயத்தை சொல்லி இவ் வியாசத்தை முடித்து விடுகிறேன். இப்பொழுது நான் பாபம் செய்தால் தண்டனை இல்லையென்றும், புண்ணியம் செய்தால் சுகமில்லையென்றும் நான் சொல்லவில்லை. அந்த தண்டனையும், சுகமும், மோட்சமும், நரகமும் இவ்வுலகத்தி லேயே உண்டு. மேலுலகத்திலில்லை, மேலுலகமும் இல்லை என்று சொல்லுகிறேன். இதை நீங்கள் அனுபோகத்தில் பார்த்திருப்பீர்கள். "அவன் முன்னே செய்ததற்கும் இப் பொழுது அனுபோகிப்பதற்கும் சரியாய்ப் போய்விட்ட தல்லவா" என்று உலக அனுபோகத்தில் சொல்லுவதும் நீங்கள் பன்முறை கேட்டிருப்பீர்கள். "இவன் இப்படிச் செய்துகொண்டேயிருந்தால் இவன் நன்றாய் அடிபடுவான்" என்று உலக மக்கள் பேசிக்கொள்வது எதைக்குறிக்கிறது? ஒவ்வொருவனும் இந்த ஜென்மத்தில் செய்ததற்கு தகுந் தாற்போல இந்த ஜென்மத்திலேயே அனுபவிப்பான் என்று விளங்கவில்லையா?

ஆகையால் நரகமும், சொர்க்கமும் இவ்வுலகம் தான் அயோக்கியர்களுக்கு இவ்வுலகம் நரகமாய்விடும், நல்லவர் களுக்கு இவ்வுலகம் சொர்க்கமாய்விடும். இவ்வுலகமானது முகக்கண்ணாடியைப் போலுள்ளது. எப்படி ஒருவன் முகக் கண்ணாடியின் எதிரில் சிறித்தால் அவ்வுருவமும் சிறிக்குமோ கோபமான முகத்தைக் காட்டினால் அதிலும் கோபமான முகத்தைக்காணலாமோ அதே மாதிரி உலகத்தில் நாம் அன் போடு நடந்தால் உலகத்தாரும் அன்போடு நடப்பார்கள்.

நாய், குருவி முதற்கொண்டு நாம் அன்போடு நடந்தால் அவைகளும் நம்மிடத்தில் அன்போடு நடக்கின்றன என்பது நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். அதே மாதிரி ஒருவன் எல்லோரையும் அடித்துக்கொண்டும், துன்பப்படுத்திக்கொண்டும் இருந்தால் அவன் எல்லோராலும் அடிக்கப்படுவான், துன்புறுத்தப்படுவான் என்பது உங்களுக்குத்தெரிந்த விஷயம். ஆகையால் இந்த உலகத்தை மோட்சலோகம் செய்து கொள்வதும் நாம், நரகம் செய்து கொள்வதும் நாம் தான்.

முன் ஜென்மம் பின் ஜென்மம் என்பதை தகப்பனேயும் முன்னோர்களையும், நாம் முன்செய்த காரியங்களையும், முன் ஜென்மமென்றும், அவர்கள் செய்த காரியங்களின் பலனை நாம் அனுபவிப்பது முன் ஜென்மத்தின் பலன் என்றுகொள்ளுவது ஒருவாறு பொருந்தும். ஏனென்றால் நம்முன்னோர்கள் பணத்தை கவனிக்காமல், சேர்த்து வைக்காமலிருந்தால் நாங்கள் ஏழைகளாகப் பிறக்கிறோம். அவர்கள் கஷ்டப்பட்டுப்பணம்தேடி வைத்திருந்தால் அதை பின் ஜென்மங்களாகிய நாம் அனுபவிக்கிறோம். முன்னோர்கள் ஏதாவது ஒரு வியாதியை சம்பாதித்திருந்தால் அது அவர்களுடைய பின் ஜென்மமாகிய சந்ததிகளுக்குத் தொடரும். நம் முன் ஜென்மங்களாகிய முன்னோர்கள் சில மனிதர்களை தேடிவைத்திருந்தால் அவர்களுக்குப்பின் பின்ஜென்மங்களாகிய நாம் அவர்களுடைய உதவியைப் பெறுகிறோம். அதே மாதிரி நாம் அடிமையாயிருப்பதற்கு நம் முன்னோர்கள்தான் கா

ணம். நம் முன்னோர்கள் கடவுளைப்பற்றியே கவலையாய் இருந்துகொண்டு நமது தேசத்தை கவனிக்காமலிருந்துவிட்டார்கள். ஆகையால் எங்களுக்கு ஆயிரக்கணக்கான கடவுள்களும், கோவில்களும் உண்டு. தேசத்தைப்பற்றி நமது தேசம் என்று சொல்லவுங்கூடத் தெரியாது. ஆங்கிலேயர்களுடைய படிப்பினால்தான் தேசபக்தியுண்டாயிற்று என்று சொல்லுவது மிகையாகாது. முன் ஜென்மங்களாகிய நம் முன்னோர்கள் தேசத்தை கவனிக்காது விட்டு, எதிரியை வெல்வதற்கு துளசிச் செடியைப் பயிர் பண்ணினார்கள். சோமனாதபுரத்து ஆலயத்தின்பேரில் கஜினிமுகம்மது படையெடுத்து வந்தபோது லட்சக்கணக்காண சேனைகளை வைத்துக்கொண்டு போர்செய்யாமல் யாகம் செய்தார்கள். கஜினிமுகம்மது இலகுவாய் வந்து கொள்ளை யடித்துக்கொண்டு போனார். இம்மாதிரி தெய்வ பக்தியால் பகுத்தறிவிழந்து தேசத்தை அன்னியர்களால் அடிமைப்படுத்த விட்டுவிட்டார்கள். ஆகையால் பின் ஜன்மங்களாகிய நாம் கஷ்டப்படுகிறோம். நாம் இப்பொழுது சுதந்திரத்திற்குப் போராடுகிறோம். இப்பொழுது நாம்கஷ்டப்படுவதின்பயன், போராடுவதின்பயன் பின்ஜென்மங்களாகிய நம் குழந்தைகள் அனுபவிப்பார்கள் என்பது வெள்ளிடைமலை.

கர்மத்தையும் ஜென்மங்களேயும் நம்பினவர்கள் சுயராஜியம் கேட்பது பொருந்தாது.

கர்மத்தை நம்பினவர்கள் என் சுயாரஜ்யம் கேட்பது பொருந்தாது என்று சொன்னேனென்ருல் இவ்வுலகத்தில் சுக படுவதும், துக்கப்படுவதும் முன்ஜென்மத்தின் பயன் என்று சொல்பவர்கள் இந்தியர்கள் கஷ்டப்படுவதற்கும், வெள்ளேயர்கள் சுகப்படுவதற்கும் முன்ஜென்மம்தான் காரணம் என்றுஒப்புக்கொண்டுதீரவேண்டும். இந்தியாவில் பிறந்திருப்பவர்கள் முன்ஜன்மத்தில் என்னபாபம் செய்தார்களோ இப்பொழுது இந்ததுன்பமனுபவிக்கிருர்கள். வெள்ளேகளாய்ப் பிறந்தவர்கள் போன ஜென்மத்தில் என்ன புண்ணியம் செய்தார்களோ இந்த ஜென்மத்தில் சுகத்தை அனுபவிக்கிருர்கள் என்றுநம்பி ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டியதைத்தவிர சுயாரஜ்யம் கேட்பது தவறு. ஏனென்ருல் கர்மத்தை யாரால் வெல்ல முடியும்? கர்மத்தின்படி நடந்தேதீரும் என்று நம்புகிறவர்கள் யாதொருமுயற்சியும் எடுத்துக்கொள்ளவேண்டியதுமில்லே, அப்படி மீறி முயற்சிப்பதுவும் அவர்களுடைய நம்பிக்கைக்கும், கொள்கைக்கும் மாருனது என்பது அவர்களே ஒப்புக்கொள்ளாமலிருக்கமுடியாது.

இதை நான் எழுதியதற்கு காரணம், இந்து மதத்தை துவேஷிப்பதற்காகவாவது, இந்து மதத்தின்பேரில் கெட்ட எண்ணத்தோடாவது எழுதவில்லே. எனக்கு இந்து மதம் பங்காளியா? எனக்கும் அதற்கும் கோர்ட்டில் வியாஜ்யம்

கிடையாது. பின் ஏன் இம்மாதிரி எழுதினேன் என்றால் இந்தியர்களாகிய நாம் க்ஷீண திசை அடைவதற்கும், இந்தப் பரிதாபகரமான நிலைமையடைவதற்கு கர்மமென்றுசொல்லுவதும், தலையெழுத்தின்பேரில் பழியைப்போட்டு விடுவதும், எடுத்ததிற்கெல்லாம் விதிவிதி என்று நம்பிக்கொண்டு முயற்சியில்லாமலிருப்பதுவும்தான் மூலகாரணம் என்று நான் அபிப்பிராயப்பட்டு இம்மாதிரி எழுதலாயினேன்.

மக்களை அறியாமையில் ஆழ்த்துவது பரலோகம்.

இறப்பதற்கு முன்னால் என்ன ஏற்படுகிறது என்னும் ஆசையும், பிறப்பதற்கு முன் எவ்வாறு இருந்தது என்னும் விருப்பமும் உண்டாவதுதான் பரலோகத்திற்கும், அதாவது கைலாசம், வைகுண்டம், இந்திர லோகம், கற்பக விருக்ஷம், காமதேனு முதலியவைகள் இந்துக்களிடையில் வருவதற்கும், கிரிஸ்து, மகம்மதியரிடையில் மோட்சலோகம், நரகம், (Judgement day) நியாயத்தீர்ப்பு நாள் உண்டாவதற்கும் காரணம். மனிதர்கள் பிறப்பதற்கு முன்னும் பின்னும் என்னும் விஷயத்தை யோசிப்பதனால் மேற்கண்ட கற்பனை உலகங்கள், பரலோகங்கள் உண்டாயிற்று என்றுகூறினேன். பரலோக நம்பிக்கை மனிதருக்கு இருப்பதில் என்ன கெடுதி. மேலும் அது மனிதர்கள் பாபம் செய்யாமலிருப்பதற்கு காரணமாயிருக்கிறது. அதனால் நன்மையே ஒழிய கெடுதி கிடையாது என்று சொல்லவுங்கூடும். மனிதன் யோசிக்க முடியாத நிலைமையில், மனிதன் விலங்குகளைப்போல் ஒருவரோடொருவர் சண்டைசெய்துகொண்டு முரட்டு சுபாவமாய் இருந்த அக்காலத்தில் சீர்திருத்தம் செய்வதற்காக மோட்சம், நரகம் என்னும் ஆயுதங்களை சீர்திருத்தகாரர்களான மதத்தலைவர்கள் உபயோகப்படுத்தி, தாங்கள்சொல்லும் விஷயங்களை கடவுள் சொன்ன விஷயங்கள் என்றும் அதன்படி நடப்போர்க்கு கடவுள் மோட்சத்தில் இடம் தருவாரென்றும், அவைகளை மறுப்போர்க்கு நரகவேதனை

கொடுப்பாரென்றும் பயமுறுத்தி மூட ஜன சமூகத்தை நல் வழியில் சீர்படுத்த எண்ணினர்கள். அந்தக்காலத்தில் அது அவசியமாயிருந்திருக்கலாம். மதத்தலைவர்களது எண்ணம் சமத்துவமும் சகோதர பான்மையும் மக்களிடத்தில் உண் டாகவேண்டு மென்பதே. ஆனல் மனிதன் யோசிக்கத் தொடங்கிவிட்ட தற்காலத்தில் நம்பிக்கை ஒன்றின் வாயி லாக கட்டப்பட்ட மதங்கள் ஆட்டங்கொடுத்து விடுவதும் ஆடிப்போவதும் சகஜமே. கடவுள், நாகம், மோட்சம், குருக்கள் இல்லாத மதங்கள் அநேகமாக இல்லை நாகம், மோட்சம், பரலோகம் ஜன சமூகத்தை எப்படி கெடுத்து விட்டது என்று கேட்பது அவசியமாகும்.

பலவேறு மதங்கள் உலகிலிருக்கும்வரை மனிதருக்குள் ஒற்றுமை உண்டாவதற்கு முடியாது என்பது எல்லோரும் தெரிந்த உண்மை. இதற்கு ஆதரவாக குறிப்பிட வேண்டு மானல் கிருஸ்துவர்களுக்குள் ரோமன் கேத்தலிக்ஸ், பிராட் டஸ்டென்ஸ் என்னும் இருபிரிவார்களுக்கு யுத்தங்களும் சண்டைகளும், பொதுவாக கிருஸ்துவர்களுக்கும், அன்னிய மதஸ்தர்களுக்கும் கிருசேட் யுத்தங்களும், அதற்கு முன் அநேக யுத்தங்களும், தற்பொழுது அரபியர்களுக்கும், ஜூஸ் என்பவர்களுக்கும் யுத்தங்களும். இந்துவுக்கும் மகம்மதியர் களுக்கும், சண்டைகளும், சைவர் சமணர், சைவர் வைண வர் கலகங்களும் போதுமான சாட்சியமாகும். இம்மதங்க ளுடைய நோக்கமும் கொள்கையும் ஒன்ருயிருந்தாலுங்கூட பரலோக விஷயத்தில் சற்று வித்தியாசப்பட்டிருக்கிறதே

இச்சண்டைகளுக்குக்காரணம், மதத்தைநம்பிக்கையின்பேரி லேயே வளர்த்துக் கொண்டிருப்பதால் அவ்வம்மதஸ்தர்கள் எல்லாமதங்களின் நோக்கம்ஒன்று, கொள்கைஒன்று என்று தெரிந்தாலுங்கூட, மதக்குருட்டுநம்பிக்கையானது அவர்களை யோசிக்கவிடாமல் அடுத்தமதஸ்தனை வெறுக்கச்செய்கிறது. அவ்வெறுப்பின் காரணத்தை முன்னிட்டே மதச்சண்டை கள் உண்டாகின்றன. ஆகையால் பரலோக நம்பிக்கையை ஒழித்துவிட்டால், பரலோக நம்பிக்கையின் வித்யாசங்களால் உண்டான பேதம் ஒழிந்து, மதங்கள் ஒன்றுவதற்கும், மத சண்டைகள் ஒழிவதற்கும் ஒரு மார்க்கம் ஏற்படும். இப் பொழுது மதச்சண்டைகளை ஒழிப்பதற்கு பரலோக நம்பிக் கையை ஒழிக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்துளோம். பரலோக நம்பிக்கையை எப்படி ஒழிப்பது என்றுயோசித்து அதற்கு ஒரு வழிகண்டுபிடிக்கவேண்டியது அவசியமாகும்.

இதற்கு நாம் முதலில் யோசிக்கவேண்டியது என்ன வென்றால் மனிதன் ஏன் பரலோகத்தைக் கருதுகின்றான் என்பதற்குக்காரணம், மனிதன் இறந்த பிறகு அம்மனித னுக்கு என்ன ஏற்படுகிறது என்று யோசிப்பதுதான் என்று முன்னமேயே குறிப்பிட்டாய்விட்டது.

இவைகளை எல்லாம் நன்றாய் ஆராய்ந்து பார்க்குமிடத்து பரலோகத்திற்கும், மனிதன் மூட நம்பிக்கைக்கும் ஆதார மாயுள்ளது ஜீவ ஆன்மா. அதாவது ஒவ்வொரு ஜீவன் களுக்கும் (பிராணிகளுக்கும்) ஒவ்வொரு ஆன்மா பிரத்தி யேகமாகவுண்டு. அது சாவதில்லை, அழிவதில்லை என்ப

தும், உடலிலிருந்து அந்த ஆத்மாவினது பிரிவுதான். இறப்பு சாவு என்று கருதுவதும், இந்த உடலைப்பிரிந்த ஆத்மா எங்குபோகிறது, அதற்கு என்ன ஏற்படுகிறது முதலியவைகள் தான் பரலோகத்திற்கும், மறுபிறப்பிற்கும், நியாயத்தீர்ப்பு நாள்களுக்கும் காரணம்.

ஜீவ ஆன்மா என்று ஒன்று எப்பொழுதும் அழியாமல் இருக்கும் வஸ்து ஒன்று இல்லை. ஜீவ ஆன்மா என்று நினைத்துக்கொண்டிருக்கும் உடலிலுள்ள ஓர்வித இயக்கும் சக்தி பஞ்சபூத சேர்க்கையால் உடலென்னும் இயந்திரம் தோன்றும்போது தோன்றி அது கெட்டு அழியும்போது அத்தோடு பிரிந்து பஞ்சபூதங்களில் ஐக்கிய மாகிறது என்று தெரியவேண்டும்.

கீதையில் ஜீவான்மா என்றும், பரமான்மா என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜீவான்மாவின் தன்மையைப்பற்றி விளக்குகையில், ஒரு மனிதன் கந்தையாயுள்ள ஆடையை எடுத்தெறிந்துவிட்டு புதுஆடை தரித்துக்கொள்வதைப்போல் ஜீவ ஆன்மாவானது ஒரு உடலைவிட்டு புதிய உடலை எடுத்துக்கொள்கிறது என்றுதெளிவாகச்சொல்லுகிறது. பரமாத்மாவைப்பற்றிவிஸ்தரிக்கையில் பரமாத்மா எங்கும்நிறைந்தது அசைவற்றது, நித்தியமானது என்று எழுதியிருக்கிறது.

ஜீவான்மாவைப்பற்றி கீதை சொன்னதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக்கூடியது ஜீவான்மா ஒன்றிருப்பதாகவும், அது உடலிலிருந்துபிரிந்து வேறு உடல் எடுத்துக்கொள்ளு

கிறது என்றும் தெரிகிறது. அது ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குப்போகிறது. அதற்கு அசைவேற்படுகிறது என்பது தெளிவாகிறது. அதே மாதிரி கிருஸ்துவ மகம்மதிய ஆத்மாக்களும் மனிதன் இறந்தபின் பிரளயகாலத்தில் எல்லா ஆன்மாக்களும் மேலுலகம் சென்று நியாயத்தீர்ப்பு நாளன்று கடவுள் நியாயாதிபதியாக இருந்து அவருடைய தூதுவர்களாகிய மகம்மது, கிருஸ்து அருகிலிருந்து சில சிபார்சுகளின்பேரில் மோட்சத்திற்கனுப்பப்படும், என்றும் சில ஆன்மாக்கள் பாபத்தின் நிமித்தம் நரகத்திற்கனுப்பப்படுவார்கள் என்றும்சொல்லுகிருர்கள். ஆகையால் இவர்களும் (Souls) ஜீவான்மாக்கள் உண்டென்றும், ஆன்மாக்களுக்கு அசைவுஏற்படுகிறது என்பதையும்நம்புகிருர்கள். இவ்வுலகத்திலிருந்து மேலுலகம் போகிறது என்பதை நம்புகிருர்கள். ஆனுல் கீதையில் பரமாத்மாவுக்கு எங்கும் நிறைந்தபொருள் என்றும், அசைவற்ற பொருள் என்றும் கூறியிருக்கிறது. ஜீவான்மாவானது பரமான்மாவில் ஒரு சிறு அணுவாயிருக்குமானுல், ஜீவான்மா பரமான்மாவினுடைய அணு என்று ஒப்புக்கொள்வதாயிருந்தால், ஜீவான்மாவும் அசைவற்றது என்று சொல்லியாகவேண்டும். ஏனென்ருல் பரமான்மா அசைவற்றதாயிருக்கும்பொழுது அதனுடைய பாகம் அசைவற்றதாய்த்தான் இருந்து தீரவேண்டியதா யிருக்கிறது. ஜீவான்மா அசைவற்றது என்று ஏற்படும்பொழுது அது ஒரு உடலைவிட்டு மற்ெருரு உடல் போகிறதென்பதும், கர்மத்தின் பலனுக போகிறதென்பதும், மறுபிறப்பென்பதும், ஆதார

மற்றதாயும், அசாத்தியமாயும் ஆகிவிடுகிறது. இது இம்மட்டோடு நிற்க,

கிருஸ்து, மகம்மதியர்களுடைய நம்பிக்கையையும் ஆராய்வோம்.

இவ்விருவர்களும் கடவுள் எங்கும் நிறைந்தவர் என்று ஒப்புக்கொண்டவர்கள். இவர்கள் மறுபிறப்பை ஒப்புக்கொள்வதில்லை. இவர்கள் இவர்களுடைய ஆத்மாக்களிறந்தபின் நியாயத்தீர்ப்பு நாளன்று மேலுலகத்திலுள்ள கடவுளிடம் போகிறது என்பதை நம்பினவர்கள்.

எனக்கு தோன்றும் சில சந்தேகங்களை இங்கு குறிப்பிடுகிறேன். அதாவது கடவுளில்லாத இடம் ஒரு இடமிருந்தாலல்லவா, கடவுளில்லாத அந்தவிடத்திலிருந்து பிரளய காலத்தில் கடவுளிருக்குமிடத்திற்கு போகமுடியும். கடவுள் எல்லாவிடங்களிலும். எங்கும் நிறைந்துள்ளபோது கடவுள் இல்லாத இடத்திலிருந்து, கடவுளிடத்தில் போவதென்றால் அதற்கு ஏதாவது அர்த்தமிருக்கிறதா என்பது விளங்கவில்லை. கடவுள் சில ஆன்மாக்களை நரகத்திற்கு அனுப்புவதென்றால் நரகம் எங்கிருக்கிறது? கடவுளில்லாத இடத்திலேயா? கடவுளில்லாத இடமே இல்லாமலிருக்கும்பொழுது, நரகம் என்று ஒன்று இருக்குமானால் எங்கும் நிறைந்துள்ள கடவுளிருக்குமிடத்தில்தான் இருந்து தீரவேண்டும். கடவுளிருக்குமிடத்தில் ஜீவன்களை துன்புறுத்தும் நரகமிருக்கமுடியுமா? கருணைக்கடலாகிய கடவுள் இப்படியும்

ஒன்றை வைத்திருப்பாரா? ஒரு பொழுதும் இருக்கவே முடியாது. கடவுளிருக்குமிடமெல்லாம் மோட்சம், சொர்க்கம் என்று கருதுவதே சிலாக்கியம். நம்முடைய ஆன்மாக்கள் கடவுளுடைய அணுக்களாய் இருக்குமானால், கடவுளுடைய பாகமாகிய நம் ஆத்மாக்களை, அங்கங்களாகிய ஆத்மாக்களை கடவுள் நரகத்திலனுப்பி வருத்துவதற்கு கடவுளுக்கு புத்தி சுவாதீனமில்லாமலிருக்கவேண்டும்.

யாராவது ஒருவர் தன்னுடைய கையை கரும்பு ஆலை கணைகளின் இடையே கொடுத்து நசுக்குண்டு போகும்படி செய்வாரா? மேலும் கடவுளுக்கு கெட்டவர் யாராவது இருக்கமுடியுமா? கடவுள் யார் மீதாவது கோபம் கொள்வாரா? கடவுளுக்கும் கோபமுண்டா? கோபம் இன்னதென்று தெரியுமா? கடவுள் உலகில் அவதாரம் செய்கிறார் என்று இந்து மதஸ்தர்கள் சொல்லுவதும், கடவுள் தூதுவரை அனுப்புவது என்று கிருஸ்து, முகம்மது மதத்தினர் சொல்லுவதையும் ஆராய்வோம்.

கடவுள் சர்வ வல்லமையுள்ளவர் என்று யாவரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். கடவுள் உலகில் யாதாவது ஒரு காரியம் ஆகவேண்டுமென்று நினைத்தால், அக்கணமே அக்காரியம் நிறைவேறாதா? இதற்காக வேலைகெட்டு உலகத்தில் அவதாரமெடுப்பதும், தூதுவர்களை அனுப்புவதும் அவருடைய வல்லமைக்கு பெருங் குறையை உண்டாக்கும். கிருஸ்து சொன்னவைகளும், மகம்மது சொன்னவைகளும், இந்தியாவில் மாத்திரம் அவதாரஞ்செய்த கடவுள்கள் சொன்

னவைகளும், கடவுள் சொன்னதாயும் அக்கடவுளுடைய தூதுவர்கள் சொன்னதாயுமிருந்தால் ஏன் ஒன்றுக்கொன்று முரண்படுகிறது? கிருஷ்ணவதாரமாக வந்த கடவுள் நான்கு ஜாதியையும் நான்படைத்தேன் என்று சொல்லிற்று. இந்த அரியபெரிய சங்கதியை தன்னுடைய கிருஸ்து, மகம்மது தூதுவர்களிடத்தில் ஏன் சொல்லியனுப்பவில்லை? கிருஸ்து சொல்வதற்கும் மகம்மது சொல்வதற்கும் ஏன் வித்தியாசம் வரவேண்டும்? சற்று நன்றாய் ஆராய்ந்து, ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள்.

கடவுள் இவ்வுலகத்திலில்லையா? எங்கும் நிறைந்த கடவுள் இவ்வுலகத்தினிடத்தும் இல்லாமலிருக்கமுடியுமா? கடவுள் இங்கேயே இருக்கும்பொழுது, கடவுள் தான் இருக்குமிடத்திற்கே தூதுவனை அனுப்புவதென்றால், பொருளற்றது என்பது அறிவுள்ள உங்களுக்கு யாராவது சொல்லவேண்டுமா? கடவுளிடத்திலிருந்து ஆத்மாக்கள் வந்ததாகவும், கன்மங்களின்பொருட்டு ஜன்மங்களெடுத்து பின் கடைசியில் கடவுளையே அடைவதாக சிலரும், சிலர் இறந்தபின் சிலகாலம் பாபம் தீர்ந்து சுத்தப்படும்வரை நரகலோகத்திலிருந்து பிறகு கடவுளை சேருவதும், சிலர் புண்ணியம் செய்தவர்கள் சொர்க்கத்திற்கும், கொடுமையான பாபங்கள் சாகும்வரை செய்தவர்கள் தீரா நரகத்தையும், முடிவில்லாத நரகத்தையும் அடைவார்கள் என்பதையும் நம்புகிறார்கள். ஒரு உயிரானது, குற்றம் செய்ததற்கு தீரா நரகவேதனையை அளிக்கும் அக்கடவுளின் நெஞ்சம்தான் கல்லோ, கடவுளின்

நெஞ்சமும் அக்கொடுமையையும் சகிக்குமா, அத்தன்மை வாய்ந்த கடவுளும் கருணைக்கடலாகுவரோ என்பதை சற்று தனியே நெஞ்சில் கையைவைத்து யோசியுங்கள். உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அம்மாதிரி செய்ய முற்படுங்கள். இதை இம்மட்டோடுவிடுத்து ஜீவான்மா என்று ஒன்று இருக்க முடியுமா என்பதை தெளிவாக ஆராய்வோம்.

இதை யோசிக்கு முன் இறப்பு, பிறப்பு என்பதைப் பற்றி சில வாக்கியங்கள் வரைவது இன்றியமையாததாகும். இவ்விஷயமாக சொல்வதற்கு முதலில் தண்ணீரை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இது அதிக குளிர்ச்சியினால் பனிக்கட்டியாவதும், அதிக உஷ்ணத்தினால் நீராவியாவதும், யாவரும் அறிந்தது. பின் பனிக்கட்டி பழயபடி தண்ணீராவதும், நீராவி முன்போன்று தண்ணீராவதும் பிரத்தியட்சம். இம்மாதிரி உருமாறுவதைத் தவிர, தண்ணீர் தண்ணீராயிருப்பது உங்களுக்குத் தெரியும்.

நம் முன்னோர்கள், முதலில் ஆகாயம், பிறகு காற்று, அக்கினி, ஜலம், மண் உண்டாயினதாகக் கொண்டுள்ளார்கள். இவைகளெல்லாம் ஒருகாலத்தில் ஆகாயமே ஆய்விடுமென்பதும், ஆகாயமாக மாறிவிடவும் கூடும் என்பதையும் நம்புகிறார்கள். இவைகளை பஞ்சபூதங்கள் என்று சொல்லுகிறார்கள்.

கடவுள் அல்லது இயற்கை ஆகாய மயமாய் அரூபி

யாயிருந்தாரென்றும், ரூபா ரூபி, பிறகு ரூபத்தோடும் ரூபமில்லாமலும் கடவுள் இருக்கிறார் என்றும் சொல்லுகிறார்கள். இதன் கருத்து என்னவாயிருக்கலாம் என்று எனக்கு தோன்றினதைக் குறிப்பிடுகிறேன்.

கடவுள் ஆகாயம், காற்று மயமாய் உருவில்லாமலும், கண்ணுக்குப் புலப்படக்கூடியவனவாய் ஜலம், அக்கினி, மண் முதலியவைகளும், பிறகு இவ்வைந்து பூதங்களின் சேர்க்கையால் அநேக கல், புல், பூண்டு, மரம், ஊர்வன, பறப்பன, நீந்துவன, நடப்பன முதலிய பல உருவங்களான பிராணிகளாக உள்ளதென்றும் பெறப்படுகின்றது. பஞ்ச பூதங்களில் கடவுள் இயற்கை (Nature) அல்லது ஒரு சக்தி இருக்கிறது என்பதற்கு ஐயமில்லை. எங்குமுள்ள கடவுள், சக்தி, பஞ்சபூதங்களில் இல்லாமலிருக்க முடியாது. என்பது அறிவாளிகளுக்கு எடுத்துச்சொல்லுவது அவசியமில்லாததாகும். ஆனால் உபநிடதங்களில் நம்பிக்கையிள்ளவர்கள் இதை ஆட்சேபிக்காமலிருக்கும் பொருட்டு இங்கு அதைக் குறிப்பிடுவது அவசியமாகும். இந்து மதத்திற்கு ஆதாரமானது உபநிடதங்கள். ஆகையால் அவைகளின் ஆதாரங்களைக்கொண்டு நம் அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தினால் வைதீகர்களுக்கு சமாதானமாயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

முண்டகோபநிஷத்.

கண்டம் 1. வாக்கியம் 6.

இந்த வாக்கியத்தில் கடவுள் எங்குமுள்ளவரென்றும்,

அழிவற்றவரென்றும், எல்லா பொருள்களுக்கும் பிறப்பிடமானவரென்றும் சொல்லியிருப்பதாக 'மதவிருக்ஷம் அல்லது பூலோகத்திலுள்ள மதங்களின் சரித்திரம்' என்னும் புத்தகத்தில் எழுதியுள்ளது. மேலே சொன்ன புத்தகத்தில், சுவேதாஸ்வர உபநிஷத் பாகம் 6 வாக்கியம் 11-ல் கீழே எழுதியுள்ள மாதிரி இருப்பதாக வரைந்துள்ளது.

"கடவுள் ஒருவர், எல்லாபூதங்களிலும் மறைந்திருப்பவர், எல்லா பூதங்களிலும் உள்ளே இருப்பவர், சகல செய்கைகளுக்கும் தலைவர், எல்லா பூதங்களிற்கும் இருப்பிடமாக இருப்பவர்," இம்மாதிரி, பஞ்சபூதங்களில் மறைந்திருப்பவர், சகல செய்கை பொருள்களுக்கும் பிறப்பிடமானவரென்று முண்டகோப உபநிஷத்திலிருப்பதும் ஆராயத்தக்கது. ஆகையால் கடவுள், பஞ்சபூத மயமாகவிருக்கிறது. இயற்கையும் பஞ்சபூத மயமாகவிருக்கிறது. கடவுள் அல்லது இயற்கை பழயபடி ஆகாயமானாலும் ஆய்விடலாம். உருவம் மாற்றமடையுமேயல்லாமல் வேறு ஒருவித சேதமும் பிறப்பினாலும், இறப்பினாலும் உண்டாக இடமில்லையென்பதை மேலே எழுதிய தண்ணீரின் திருஷ்டாந்தத்தைப் பார்த்தால் தெரியாமல் போகாது. கடவுள் அல்லது இயற்கை (Nature) சர்வவியாபகமாய், நீக்கமற வியாபித்திருப்பதால், உருவங்கள் அல்லது பிராணிகள், கடவுளிடத்தே தோன்றி, கடவுளிடத்தே இருந்து கடவுளிடத்தே அழிவதாக அறியப்படுகிறது. ஆகையால்,

(1) ஒவ்வொரு உயிருள்ள வஸ்துக்களும் பிறப்பதற்கு முன் கடவுளிடத்தே தான், இயற்கையிடத்தே தான் (Nature) இருந்து தீரவேண்டும்.

(2) பிறந்த பிறகும், தோன்றிய பிறகும், கடவுள் அல்லது (Nature) இடத்தே தான் இருந்து தீரவேண்டும். ஏனென்றால் கடவுளில்லாத இடமே இல்லை.

(3) இறந்த பிறகும், அழிந்தபிறகும் கடவுளிடத்தே தான் போய்ச்சேரவேண்டும்.

இதை நன்றாய் யோசித்துப் பாருங்கள். தோன்றுவதற்கு அல்லது பிறப்பதற்கு முன்னும், தோன்றின பிறகும், அழிந்த பிறகும் கடவுளித்திலேயே தானிருந்து தீரவேண்டும். இப்படிச்சொல்லுவதற்கு பதிலாக எக்காலமும், முக்காலமும் கடவுளிடத்திலேயேதான் எல்லாம் இருந்து தீரவேண்டும். ஆகையால் கடவுளிடத்திலிருந்து வருவதும், கடவுளிடத்திற்கு, மேலுலகத்திற்கு போவதும் நகைக்கத்தக்க காரியம் என்றே சொல்லவேண்டும். பிறப்பு என்பது, மண், சாணம், அழுகிய பழங்கள், முதலியவைகளில் புழுக்கள் தோன்றுவதுபோல் காலகாலங்களில் சீதோஷ்ணஸ்திதி, இடம் முதலியவைகளை யொட்டி பிறப்பு உண்டாகின்றன, அநேக பயிர்களில் ஒவ்வொரு காலங்களில் ஒவ்வோர் விதமான புழுக்கள்தோன்றுவதைப் பார்த்திருப்பீர்கள். அவைகளெல்லாம் கர்மத்தின் பொருட்டு பிறக்கிறதா? அல்லது அவ்வக்காலங்களில் தற்செயலாக, இயற்கையாக உண்டாவதா? கர்மத்தின் பொருட்டு பிறப்பதானால் கோடிக்கணக்கான எல்லா புழுக்களும், ஒரே சமயத்தில் தோன்றுவதற்கு ஒரேவிதமான கர்மம் செய்தனவா? நன்றாய்யோசித்துப்பார்த்தால் தற்செயலாக விழுந்தது, இயற்கையாக தோன்றியது என்று அறிவுள்ளவர்கள் தெரியக்கூடும். மற்றும் மழை

காலங்களில், எவ்வளவோ பூச்சிகள் தோன்றி, சில நாட்கள் இருந்து பின்னும் அழியப்படுகிறது. அதேமாதிரி ஒவ்வொரு உயிர்களும் சீதோஷ்ண ஸ்திதியை ஒட்டி இயற்கையாக, தற்செயலாக தோன்றி மறைகிறது. இப்படி ஏன் தோன்றி மறையவேண்டும், ஏன் கடவுள் அல்லது (Nature) இயற்கை தன்னை இப்படி ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று கேட்பீர்களாகில், பதில் கிடைக்கப்போவதில்லை. கட்டாயம் பதில் தெரியவேண்டுமானால் கடவுளைத்தான் கேட்கவேண்டும். ஒருவரும் கடவுளைக் கேட்கப்போவதுமில்லை, அந்தக் கேள்விக்குப் பதில் தெரியப்போவதுமில்லை என்பதே என்னுடைய மனப்பூர்வமான அபிப்பிராயம். கடவுள் கனவில் சொல்லிற்றென்பது, ம்கடவுளிடத்தில் பேசினேன் என்பதும் கடவுள் மனிதரின் பேரில் வந்து சாமியாடி சொல்லுவதும், ஊசியினுடைய காதின் வழியாக யானைகள் நுழைந்து போகிறது என்பதைக்காட்டிலும், பகிரங்கப் புளுகு என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நாம் எடுத்துக்கொண்ட விஷயமான ஜீவன் உண்டா என்னும் விஷயம், அது மிக பெரிய விஷயமென்றாலும் தகும், மிகச்சிறிய விஷயமென்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். அறிவாளிகளாயிருந்து இவ்விஷயத்தை யோசித்து முடிவு கட்டினவர்களுக்கு மிகச்சிறிய விஷயமே. அப்பேர்ப்பட்டவர்களுக்கும், நுண்ணிய அறிவாளிகளுக்கும் இப்பொழுது சொல்லும் அல்லது எடுத்துகாட்டும் காரணத்தை முன்னிட்டே தெளிவுறலாம்.

67936
R34

பரமான்மா, கடவுள் சர்வ வியாபகன் (Omnipresent) என்பது எல்லா மதஸ்த்தரும் ஒப்புக்கொண்ட விஷயம். அதாவது கடவுள் நீக்கமற நிறைந்து எங்கும் இருக்கிறார் என்பதாகும் கடவுளே, பரமான்மாவே எங்கும் நிறைந்துள்ளபொழுது, கடவுளல்லாத வேறு வஸ்து எங்கேயாவது இருக்க முடியுமா? அப்படி கடவுளல்லாத வஸ்து எந்தவிடத்திலாவது இருக்குமானால் அந்த இடத்தில் கடவுளில்லை என்றே சொல்ல வேண்டும். ஆகையால் கடவுளல்லாதது எங்குமில்லை என்பது தெற்றென விளங்கும். ஆகவே கடவுளல்லாத பரமான்மாவல்லாத ஜீவான்மாவும் எங்குமில்லை, இருக்க வழியில்லை, இருப்பதாக நம்புவதற்கு எவ்விதச் சான்றுமில்லை. அப்படியிருப்பதும் அசாத்தியம். மேலும் உயிரினுக்குயிரான பரமாத்மாவே எங்குமிருக்கும் பொழுது அதாவது பனிக்கட்டி எங்குமிருக்கும்பொழுது தண்ணீராகிய அதாவது ஜீவன் என்று சொல்லப்படுவது பனிக்கட்டியினுடைய மாறான தோற்றமன்றி, பனிக்கட்டிக்கு மாறான தன்று ஆகையால் தோற்றத்தைக்கொண்டு பனிக்கட்டி, தண்ணீர் என்று வெவ்வேறான வஸ்து என்று பிரிப்பது எப்படி அறியாமையாகுமோ அதே மாதிரி ஜீவனையும், பரமான்வாவையும் பிரிப்பது அறியாமையே யாகும் என்பதில் ஐயமில்லை. இங்கு சந்தேகமான கேள்விகளை சொல்லி அதற்கு என்னாலியன்ற சமாதானம் எழுதவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறேன்.

ஏன் உயிருள்ள பிராணிகள் நடக்கின்றன, சத்தம் செய்கின்றன கல், மண் ஏன் அப்படி செய்வதில்லை, என்னும்

கேள்வி முக்யமானதாகும். கடவுள் அல்லது இயற்கையி
னுடைய அமைப்பு அவ்வாறிருக்கிறது. அந்த இயந்திர அ
மைப்பை இபற்கை அல்லது, கடவுள், தானாக அமைத்துக்
கொண்டால், அது நடக்கும், பேசும், யோசிக்கும், சிறிக்
கும, அந்த அமைப்பு பின்னப்பட்டால் அந்தப்பிராணி
களாகிய இயந்திரங்கள், ஒன்றும் செய்யாது. அதைத்தான்
பிணம் என்று சொல்வது. மனிதனால் செய்த இயந்திரத்தி
ற்கு ஓட்டுகிறவன் ஒருவன் வேண்டும், இயற்கை இயந்திர
மாகிய மனிதன், அல்லது பிராணிகளுக்கு ஓட்டுகிறவனாகிய
அறிவைக் கொடுக்கும் மூளையை அதிலே அமைத்துள்ளது.
பிராணிகளையும், மற்ற கோடிக்கணக்கான இபற்கை இயந்
திரகளாகிய உயிர்களையும், தாவரங்களையும் கல், மண், ஜலம்,
நெருப்பு முதலியவைகளையும், மணிக்கு ஆயிரம் மைல் வீதம்
சுற்றும் பூமியையும் மற்றும் அநேக கணக்கற்ற நட்சத்திரங்
களையும், கோளங்களையும் இயங்கிக்கொண்டிருக்கிற சக்தி
யாகிய கடவுள் ஒன்றே, ஆத்மா ஒன்றே. இவைகளெல்லாம்
சக்தியே, கடவுளே அல்லாது தனித்தனியாக ஓட்டுகிற
சக்தி ஒன்றும் கிடையாது, "ஓர் அணுவும் அவனன்றி அசை
யாது" என்பதும் இந்தக்கருத்தைக்கொண்டதே ஒழிய வே
றில்லை. சாணம், அல்லது வெண்ணை நகருவதில்லை ஆனால்
அது புழுக்களாய் மாறினால் அது நகரச்செய்கிறது. அது
எப்படி புழுக்களாய் மாறும் என்று கேட்கலாம். உயிர்க்
குயிராய் நின்ற பொருள் என்று தாயுமானவர் பாடி வைத்
திருக்கிறார். அதை ஊன்றிப்பார்க்குமிடத்து மேற்சொன்ன
சந்தேகம் நீங்கப்பெருகின்றது. எப்படியெனில் உயிர்க்குயிராய்

அஃதாவது உயிர்க்கும் உயிராகிய கடவுள் எவ்விடத்தும் இருப்பதால் சாணம், வெண்ணெயினிடத்தும் அது இருந்துதீர வேண்டும். உயிர்க்கும் உயிராகிய உயிர்களை உண்டாக்கக்கூடிய வஸ்து, உயிர்களுக்கு ஆதாரமாகிய அப்பரம் பொருள் வியாபித்திருக்கும் சாணத்திலும், வெண்ணெயிலும் உயிர்கள் தோன்றுவதற்கு ஆச்சரியப்படவேண்டிய காரணம் ஒன்றுமில்லை. பாலிருக்கும் பொழுது, அதைக்கொண்டு வெண்ணெ, நெய், தயிர் மோர் உண்டாக்குவது போன்று பாலைபொத்த, உயிர்களை உண்டாக்கக்கூடிய உயிர், கடவுள் ஆன்மா, எங்குமிருக்கும்பொழுது சாணத்திலிருந்து உயிர்கள் உண்டாவதென்பது எவ்விதத்திலும் சந்தேகப்படத்தக்க விஷயமொன்றுமில்லை. எல்லா உயிர்களுக்கும், தாவர உயிர்களுக்கும் அஸ்திபாரமாகிய, காரணமாகிய (Unit of Life) உயிரின் அணுவாகிய பிரோட்டோ பிளாசம் (Proto Plasm) என்பது தற்செயலாக, உயிருக்குயிராயும், எள்ளினுள் எண்ணெ போலும் சர்வ வியாபகமாயுள்ள சக்தி, கடவுள் இயற்கையாக, சீதோஷ்ண ஸ்திதியை ஒட்டி தோன்றி பின் அவைகள் தனித்தனியாகவும், இரண்டாகவும் மூன்றாகவும், ஆயிரக்கணக்காகவும், கோடிக்கணக்காகவும் சேர்ந்து வெவ்வேறு பிராணிகளாகவும், தாவரங்களாகவும், மாறிற்று என்பதை விஞ்ஞான சாஸ்திரிகள் அறிந்து வெளியிட்டிருக்கின்றனர். ஆகையால் சகலத்திற்கும் காரண பூதமாயுள்ளது, கடவுள் அல்லது இயற்கை, சக்தி ஒன்றே என்பதை உறுதிப்படுத்துவதற்குக் காரணம் இருக்கின்றது. "Dust thou art dust thou returnest" என்பது பைபிளிலிருக்

கிறது. 'நீங்கள் மண்ணிற்றோன்றிய மண்ணே, திரும்பி அழிந்து போய்ச்சேறுவதும் மண்ணே' என்று பொருள் படும் என்று கருதுகிறேன். இவ்வாக்கிலிருந்து நீங்களே ஆராய்ந்து கொள்க.

மனிதன் ஏன்பேசுகிறான் மண், ஏன் பேசுவதில்லை என்பது எத்தகையது என்றால் ஓர் பாத்திரத்தில் காயவைத்த நீரிலிருந்து போகும் நீராவியை போன்றது மண், ரயிலிலுள்ள இன்ஜினின் பிஸ்டனைத் (Piston) தள்ளக்கூடிய நீராவியை ஒத்தது மனிதன். அந்த பாத்திரத்தில் வரும் நீராவிக்குச் சக்தியிருந்த போதிலும், போதுமான அமைப்பில்லாததால் அது ஒன்றும் செய்வதில்லை. ஆனால் பிஸ்டனைத்தள்ளக்கூடிய நீராவி, அதற்குத்தகுந்த அமைப்பு ஏற்பட்டிருப்பதால் அது அவ்வளவு பெரிய ரயில் வண்டிகளை இழுத்துச் செல்லுகின்றன. மனிதனுக்கும், மண்ணுக்கும் இவ்விதமான பேதமன்றி வேறு வித்தியாசம் யாதென்றுமில்லை.

ஏன் இப்மாதிரி கடவுள் அல்லது இயற்கை தன்னை பல விதமாக அமைத்துக் கொள்ளவேண்டுமென்றால், அது அப்படித்தான் செய்கிறது! ஏனோ!! எதற்கோ!!! நமக்கு எட்டாத விஷயம், என்று தான் சொல்லவேண்டும்.

சிலபேர், உடம்பில் ஆத்மா இருப்பதை நிர்ணயம் பண்ணவும், உறுதிப்படுத்தவும், சிலதிருஷ்டாந்தங்களை எடுத்துச் சொல்லுவார்கள், அதாவது ஒருமனிதன் நன்றாய்த் தூங்கி எழுந்திருந்து "நான் நன்றாய் தூங்கினேன்" என்று சொல்லு

கிறான். அவன் தூங்கிக்கொண்டிருந்தானே, அப்படி தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது 'நான்' என்பது ஏதோ ஒன்று ஜாக்ரா அவஸ்தியில், விழித்துக்கொண்டிருக்கிறது, அது, தூங்குகிறதில்லை. அதுதான் ஜீவாத்மாவென்று கூற முன் வரக்கூடும்.

அந்த மனிதன் தூங்கும் பொழுது கனுக்காணாமலும், மத்தியில் விழிப்பில்லாமல் ஒரே தூக்கமாய் தூங்கி எழுந்திருந்து, நல்ல தூக்கம், தீரேகம் சுடக்கெடுத்தாப்போலிருக்கிறது என்று சொல்லுகிறான். தூங்கி எழுந்தபின் அவனுக்கு உடம்பு சௌகரியமாயிருப்பதை உணர்ந்து அவன் அப்படி சொல்லுகிறேன் அல்லது ஏதோ ஒன்று எப்பொழுதும் விழித்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அது ஆத்மாவல்ல, நமது கபாலத்திலுள்ள மூளையில் அநேக பாகங்களிருக்கின்றன. அதில் ஒரு பாகம் தூங்காமலிருக்கலாம், அந்த பாகமாகிய மூளையை ஆத்மாவென்று சொல்லிவிடுவதானால் அந்த குணத்தையுடைய எல்லாவற்றையும் ஆத்மாவென்று சொல்லவேண்டும். அந்தப்படிக்கு பயித்தியக்காரனைக்கூட ஆத்மாவென்று சொல்லவேண்டும். ஏனென்றால் அவன் தூங்குகிறதில்லை. மூளையில் ஒரு பாகம், தூங்குகிறது மற்றொரு பாகம் விழித்திருக்கிறது என்பது எப்படி சாத்தியப்படும், எப்படி முடியும் என்று சந்தேகப்படுவார்களேயானால்; ஒரு பிராணிக்கு பகலில் கண் தெரியும் மாதிரியும், மற்றொரு பிராணிக்கு இரவில் கண் தெரியுமாதிரியும் விச்சித்ரமாய் அமைக்க வல்லமையுள்ள கடவுள், இயற்கை, ஏன் மூளையில் ஒருபாகம் சதா விழித்துக்கொண்டிருக்குமாதிரி அமைத்திருக்க முடியாது என்றுதான் கேட்போம்.

மேலும் "நான் தூங்கினேன்" என்பதிலிருந்து நான் என்பது ஜீவான்மாவென்றால், நான் என்று சொல்லுவது அறியாமை, நான் என்று ஒன்று இல்லை, நான் என்பது ஒழித் தாலொழிய ஞானத்தை அடைய முடியாது, நான் என்பது அகங்காரம், நான் என்னும தன்னை மறந்திருப்பதே மோட்சம், ஞானம், பரம் பொருளோடு ஏகமாயிருக்கும் சமயம், என்று ஆதி சங்கரர் முதற்கொண்டு அநேக பெரியார்கள் அபிப்பிராயப்பட்டிருப்பதாக தெரிகிறது. "தூங்காமல் தூங்கி சுகம் பெருவதெக்காலம்" என்பதும் தன்னை அதாவது நான் என்றும் அகங்காரத்தை ஜீவான்மாவை அகற்றியதேயாகும். ஆகையால் சகலமும் ஒன்றே, என்னும் ஏகான்மா வாதத்தில் ஜீவான்மா, பரமான்மாவென்றே பேதம் கிடையாது. இனியும் நம் பெரியோர்கள் நூலிலிருந்து ஆதாரமெவ்வளவுவேண்டுமென்றாலும் எடுத்தெழுதலாம். சித்தர்கள் நூல்களில் அத்துவிதமே நிறைந்திருக்கின்றது. அவைகள் எல்லாம் ஜீவான்மாவை மறுக்கும் நூலாகுமென்றே கருதுகிறேன். இது நிற்க, நான் என்னும் பொருள், ஜீவான்மா இல்லை என்பதை நம்பெரியோர்கள் நூல்களே ஒப்புக்கொள்கிறது ஆனாலும், நம் சந்தேகத்தை இன்னொருவர் எழுதிவைத்ததிலிருந்து நிவர்த்தி செய்யக்கூடாது. கல்வி, கேள்விகளை நம் சுய அறிவு கொண்டு ஆராய்ந்து முடிவு கட்டவேண்டும். அதாவது நன்றாய் நம் சிந்தனை சக்தியை கட்டுப்பாடின்றி உபயோகப்படுத்தி அதில் ஒவ்வொன்றையும் அலசிப் பார்க்கவேண்டும். ஆதலின், 'நான்' என்பது உண்டாவென்று தர்க்கிப்போம்.

'நான்' என்னும் வஸ்து இருந்தால் ஒவ்வொரு பிராணிக்கும் இருக்குமாதலால் இவைகளெல்லாம் சேர்ந்து நாங்கள் என்று ஆகும். பன்மை எற்படும், இயற்கை அல்லது கடவுள் ஒன்றே, ஆன்மா ஒன்றே என்பதே எமது, முடிவுஎன்று ஏற்கனவே தெரிவித்தாய்விட்டது. ஏகான்மவாதிகளின் கொள்கையும் அதுவே. ஒரு மனிதன்தனக்கு ஒரு ஜீவான்மாவிருப்பதாகசொல்லுவதாக வைத்துக்கொள்வோம். இயற்கையில், எங்கும் கடவுளுக்கு மாறுபட்ட வஸ்து இருக்கவிடமில்லையாதலால் ஜீவான்மா என்று சொல்லுவதை கடவுளுக்கு மாறுனது என்று சொல்லுவது பொருந்ாது. மேலும் ஜீவான்மாவென்பது பரமான்மாவினுடைய அணு என்றால் அது கடவுளுடைய பாகமாகிறது. எப்படி ஒருமனிதன், தன், கைவிரலில் ஒன்று தனக்கு பிரத்தியேகமாக ஒருஆத்மா இருக்கிறது என்றால், அம்மனிதன் ஒப்புக்கொள்ள மாட்டானோ அதே மாதிரி கடவுளின் பாகமாகிய மனிதனும், மற்ற வஸ்துக்களும் தங்களுக்கு பிரத்தி யேகமாக, தனித்தனியாக ஆன்மாக்கள் இருப்பதாக சொல்லுவதற்கு இடமில்லை, காரணமுமில்லை. ஏனென்றால் இவனுடைய விரல் இவனுக்கு எப்படி பாகமோ, அம்மாதிரி இவன் கடவுளுக்கு ஒரு பாகமாகிறான். இவனுடைய பாகமாகிய கைவிரலுக்கு எப்படி தனிப்பட்ட ஆத்மா இல்லை என்று மறுத்தானோ, அதே நியாயத்தில், இவனும் இவனுக்கென்றிருந்த ஜீவான்மாவை இழந்தவனாகிறான்,

''அவனன்றி ஓர் அணுவுமசையாது'' என்பதின் கருத்திற்கிசைய பரமான்மாவன்றி, ஜீவான்மா இல்லை என்பதாகும்

உதாரணமாக ஒரு மனிதன் நான், நடக்கிறேன், நான் பேசுகிறேன் என்று சொல்லி நான் என்பதுதான் ஜீவான்மா என்று சொல்லுவானுகில், அவன் தேகத்திலுள்ள கோடிக் கணக்கான ரோமங்கள், நாங்கள், முளைக்கிறோம், க்ஷவரம் பண்ணிவிட்டால் திரும்பியும் முளைக்கிறோம், கருப்பாக கொஞ்சகாலமிருக்கிறோம், பின் வெள்ளையாகிறோம் எங்களுக்கு உயிருண்டு என்று சொல்லுவது போலாகும். அம் மனிதனுக்கு ஒரு ஜீவான்மா பிரத்தியேகமாக உண்டென்றால், அக்காரணத்தின் பொருட்டே அவனுடைய கோடிக் கணக்கான ரோமங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆத்மாக்கள் உண்டென்றுதான் சொல்லவேண்டும், ஏனென்றால் இவன் பேசுகிறான், நடக்கிறான், யோசிக்கிறான், அது வளர்கிறது, நரைக்கிறது, உதிர்கிறது. அது எப்படி அவைகளுக்கு பிரத்தியேக ஆத்மாக்கள் உண்டென்று சொல்லமுடியும், அம்மனிதன் உயிரோடிருப்பதாலல்லவோ அந்த ரோமங்கள் வளர்கிறது. ஆதலால் அவைகளுக்குத் தனிப்பட்ட உயிர்கள் கிடையாது என்று சொல்லுவார்களானுல், "அவனன்றி ஓர் அணுவுமசையாது" என்பதின் கருத்திற்கிணங்க அவன் அதாவது பரமான்மா, கடவுள் அன்றி மனிதனுவது, மற்றென்றுவது பேசவோ, நகரவோ முடியாதாகையால் மனிதனுக்கும், மற்றெதற்கும் தனிப்பட்ட ஆன்மா கிடையாது ஜீவான்மாக்கள் கிடையாது. எப்படி மனிதன் உயிரோடிருப்பதால் ரோமம் வளர்கிறதோ, கடவுளோ, ஒரு சக்தியோ இருப்பதால் தான் மனிதன் உயிரோடிருக்கிறான். ஆகையால் ஓர் ஆன்ம சக்தியை ஒட்டியே எல்லாம் இயங்குகிறது என்பது கிழக்குத்திசையில் சூரியன் உதயமாகிறதென்பதைப் போல் உண்மையானதும் நிலைநாட்டக்கூடியதுமாகும்.

மற்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு ஜீவான்மாவிருக்கிறதென்ற நம்பிக்கை எவ்வளவு நகைப்புக்கிடமானதென்பதை கீழே குறிப்பிடும் காரணத்திலிருந்து அறியக்கூடும். மலேரியா என்னும் காய்ச்சலோ அல்லது க்ஷயம் முதலிய நோய் வந்தவர்கள் தேகத்தில் கோடிக்கணக்கான உயிருள்ள கிருமிகள் இருக்கும் என்பது வெளிப்படையான விஷயம், அந்த ஒவ்வொரு கிருமிக்கும் ஜீவான்மா இல்லை என்று மறுக்க முடியாது. மேலும் ஒவ்வொருவர் வயிற்றிலும், அநேக புழுக்கள் இருக்கக்கூடும். மேலும் மனித சரீரமானது புழுக்களால் அமைக்கப்பட்ட கூடு என்றே சொல்ல வேண்டும். ப்ராட்டா பிளாசம் (protoplasm) என்று உயிருள்ள அணுக்களின் சேர்க்கை நமது தேகமாகையால், ஒரு ஜீவான்மாதான் ஒரு மனிதனுக்கிருக்கிறது என்பது எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமல்ல.

ஜீவான்மா கிடையாது என்ற விஷயம் எனக்கு உண்மையாகத்தோன்றியதாலும், அதனுல் அநேக மூடப்பழக்க வழக்கங்கள் நடைபெற்று வருதலாலும் ஜீவான்மா கிடையாது என்பதாக என் தாழ்மையான அறிவுக்கு உதயமானதை எழுதினேன். அறிவாளிகள் இதைப்படித்து அவரவர்கள் அபிப்பிராயத்தை எனக்குதெரியப்படுத்தினுல் அதையும் அன்புடன் வரவேற்கிறேன்.

எந்த விஷயத்தையும் அனுபவத்திற்கு ஒத்திருக்கிறதா என்று பார்ப்பது முறையாகும். ஜிவான்மா இல்லை என்ற விஷயத்தை நிரூபிக்க அனுபவ முறையிருக்கிறதா என்று

பார்ப்போமானல், இருப்பதாகவே தெரிகிறது. ஒரு ஜெர்மன் டாக்டரும், ஒரு ருஷ்யா டாக்டரும், ஒரு இறந்துபோன நாயிக்கு இன்ஜெக்ஷன் செய்து, அந்த நாய் எழுந்து இரு பது நாட்கள் ஓடிக்கொண்டு இருந்தது என்ற விஷயத்தை பேப்பர்களில் பார்த்திருக்கலாம். 'தமிழ் நாடு' வாரப்பதிப்பில் விஞ்ஞான ஆராய்ச்சி என்னும் பகுதியில் ஒருவர் சில கிருமி களை சிருஷ்டிசெய்ததாக எழுதியிருந்ததை பார்த்திருக்கலாம். அப்படி சிருஷ்டி செய்தவருக்கு அவர் வசத்தில் ஜீவாத்மாக் கள் உண்டா? கிடையாது. பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாகும் ஓர்வித சக்தியைத்தான் நாம் ஜீவாத்மா வென்று நம்பியிருக்கிறோம் என்று முன்னமே நாம் தெரிவித்திருக்கி றோம். அந்த சக்தியானது பஞ்சபூதங்களின் பிரிவால் (அளவு பின்னப்பட்டால்) பஞ்சபூதங்களிலேயே ஐக்கியமாகி றது.

இனி ஜீவான்மா இல்லை என்பதற்கு இவைகளை விட வேறு அத்தாட்சிகள்வேண்டியதில்லையென்று நினைக்கின்றேன். ஜீவான்மாவை நம்பும் மதங்கள், மறைந்து உலகத்தை விட்டு வெளியேறி விடும் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. பரலோகத்தை நம்புவது அறிவுக்கு பொருத்தமாகாத விஷய மாதலால், அதுபற்றி வாசகர்கள் நன்ருய் யோசித்து, இந்த வியாசத்தை மறுமுறை படித்து, உங்களுக்கு நியாயம் என்று பட்டதை எற்றுக்கொண்டு, பொய் என்பதை தைரியமாய் உதறித்தள்ளி விடுங்கள் என்று பரிந்து கேட்டுக்கொள்கிறேன்.

வர்ணாச்சிரம தர்மம்.

சூட்சி நிறைந்ததும் ஆதாரமற்றதுமாகும்.

வர்ணாச்சிரம தர்மம் என்றால் என்ன? இதற்கு ஆதாரம் எது? இதனால் நன்மை தீமைகள் என்ன? அனுபவ ரீதியில் கொண்டுவர முடியுமா? என்றவிஷயங்களை யோசித்துப் பார்ப்போம்.

பொதுவாக இது இந்திய ராஜீய விஷயத்திற்கும், முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாயிருப்பதுமன்றி இந்தியா அன்னியர் படை யெடுப்புகளுக்கு இரையாவதற்கும் இது ஒரு மறைக்க முடியாத காரணமாயுமிருந்தது மற்றும் ராஜீய சமூக விஷயங்களுக்கும் புரம்பே நியாயத்திற்கும், மனித வர்க்கத்திற்கும் கெடுதிவிளைவிப்பதாயும், ஒருவருக்கு சுகமும், ஒருவருக்கு கஷ்டமும் உண்டாக்குவதாயும், மனித இன்பத்திற்கு உயிராயுள்ள காதலுக்கு இடையூறு செய்வதாயும் இருப்பதால் இதை ஒழிக்கவேண்டியதே மனித இன்பத்தைக்கருதும் ஒவ்வொருவருடைய முதற்கடமையாகும். இதனால் உண்டாகும் நன்மை தீமைகளை ஒருவாறு ஆராய்ந்து தீமை அதிகமென்றும், நன்மை எள்ளளவுமில்லை என்றும் தெரிந்தோம். அத்துடன் இதைத்துலைத்துவிடவேண்டுமென்றும் முடிவுகட்டிவிட்டோம்.

பிறகு இதற்கு ஆதாரமெது, வர்ணாச்சிரமதர்மிகள் அத்தாட்சியாய் எடுத்துக்காட்டுவது எது என்று நன்றாய்பார்ப்

போமே யானால் "பகவத்கீதை" என்றே சொல்லவேண்டும். பிறகு அந்த நூல் யார் திரட்டியது, எப்பொழுது எழுதப் பெற்றது என்று பார்ப்போமே யானால் இந்நூல் பாரதப் போருக்கு பிற்பட்டதென்று மாத்திரம் நிச்சயமாக சொல்லலாமன்றி ஆசிரியர் யார் என்று நிர்ணயிக்கவோ, காலத்தை சரிவர குறிப்பிடவோ முடியாதென்றே அபிப்பிராயப்படுகிறேன். ஏனென்றால் ஆசிரியர் யார் என்பதே புரட்டாகவிருக்கிறது. இதற்கு ஆசிரியர் கடவுள் என்று சிலர் சொல்லிக்கொண்டும், கிருஷ்ணன் என்றும் சொல்லுகிறார்கள். அதிலும் இதை வெளியிட்ட சமயத்தைக்கேட்டால் அதுவும் நம்புவதற்கிடமில்லாததாகவிருக்கிறது எப்படி என்று கேட்பீர்களாகில்இந்நூல் கிருஷ்ணன் அர்சுனனுக்கு, அர்ஜுனன் போர்முகத்தில் தனக்கு எதிரிகளாயுள்ள குருமார்களையும், சகோதரர்களையும், உறவினர்களையும் பார்த்து மனமுறிந்து, சண்டைசெய்ய மாட்டேனென்று தன்காண்டிபத்தை கீழே வைத்துவிட்ட சமயத்தில் வெளியிட்டதென்று சொல்லப்படுகிறது. போர்துடங்கும் தருணத்தில் யாவரும் ஆத்திரத்தோடும், ஆயுதத்தோடுமிருந்திருப்பார்கள் என்பது சொல்லவேண்டியதில்லை. அவ்வளவு பெரிய குழப்பமான போர்முகத்தில் கிருஷ்ணன் சொன்னவைகளை யார் பேனாவும் கையுடன், எழுதியது? இவைகளை யெல்லாம் நன்றாய் ஆராய்ந்தால் கிருஷ்ணன் சொன்னவைகளல்ல வென்றும், யாரோ தன் கருத்தை கிருஷ்ணனும், அர்ஜுனனும் சம்பாஷித்த மாதிரி சம்பாஷனையாக இயற்றியிருப்பதும் தெரியவரும்.

அக்காலத்திலுள்ள ஆசிரியர்கள் தம் நூலுக்கு பொது மக்களிடத்தில் மதிப்பு உண்டுபண்ணவும், மக்களைப் பயப் படுத்தி அந்நூலின் கருத்திற்கிணங்க நடக்கச்செய்வதற்கும், அக்காலத்திலுள்ள மனிதர்களின் மனப் போக்கையொட்டி கடவுள் என்னும் மாத்திரையை அதில் கொஞ்சம் உரைத்து விடுவது சகஜமாகவிருந்தது. கீதையை கிருஷ்ணபரமாத்மா சொன்னாரென்பதும், சிவபெருமான் அடியெடுத்துக்கொடுத்த தும், முருகன் அகஸ்த்தியருக்கு சொன்னார் என்பதும், பரம சிவன் பார்வதிக்கு சொன்னார் என்பதும், பரமசிவன் பார்வ திக்கு சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது ஒளிந்து கேட்டுக் கொண்டுவந்து வெளியிட்டது என்பதும் இன்னும் இவை போன்றவைகள் யாவும் மேலேசொல்லப்பட்ட மாத்திரை யின் சேர்க்கையே யாகும்.

இந்த கீதையில் ஒவ்வொருவரையும் பற்றற்றவர் களாக விருந்துகொண்டு தங்கள் கடமையை நிறைவேற்று மாறு வற்புறுத்துகிறதாக பல பெரியார் சொல்லக் கேள்விப்பட்ட தும், கொஞ்சம் தெரிந்துகொண்டதும் உண்டு. இது மிக வும் போற்றத்தக்கது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார் கள் என்று நம்புகிறேன் ஆனால் ஒவ்வொரு மனிதனின் கடமையின்ன தென்று தீர்மானம் செய்துகொண்டுதான் அக்கடமையை நிறைவேற்ற முற்படல் வேண்டும். கீதை பொதுவாக எல்லோருக்கும் பாரபட்சமின்றி சொல்லியிருக் கிறதா என்று பார்க்குமிடத்து அங்கு பெரும் மோசடியாக விருக்கின்றது. எல்லோரும் ஏமாறக்கூடிய சூட்சி நிறைந்த கட்டமும் இது வென்றே சொல்லவேண்டும்.

கீழே குறிப்பிடும் கீதையிலுள்ள சுலோகங்களை ஊன்றி கவனியுங்கள்.

சாதுர் வர்ணயம் மாயஸ் ருஷ்டம் குணகர்ம விபகாச:

(பொருள்) நான்கு வருணங்களும் என்னால் உண்டாக்கப்பட்டவைகள். அதுவும் குணங்களினாலும் கருமங்களினாலுமே வேறுபாடன்றி, வேறு வேறுபாடு கிடையாது.

இங்கு எழுதியுள்ள பொருள் சரியானதென்று மறைமலை அடிகள், சுவாமி வேதாசலம் உட்பட சமஸ்கிருத பண்டிதர்கள் அநேகர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இனிமேல் குறிப்பிடும் சுலோகத்தின் கீழ் எழுதியுள்ள பொருளும் அவ்விதமே ஒப்புக்கொள்ளப்பட்டதென்று அறிந்துகொள்ளுமாறு வாசகர்களை தூண்டுகின்றேன்.

மேலே குறிப்பிட்ட சுலோகத்தின் பிரகாரம் குணத்தையும், தொழிலையும் பொறுத்து தானே ஜாதி என்று ஒருவாறு பலர் ஒத்துக்கொள்ளவும் எண்ணலாம். ஆனால் குதிரைவண்டி ஓட்டுகிற பார்ப்பான், மிட்டாய்கடையில் மாவாட்டுகிற பார்ப்பான், செருப்புவியாபாரம் செய்யும் பார்ப்பான், வக்கீல் பார்ப்பான், முதலியோர்கள் தங்களை பிராமணர் அல்லவென்று சொல்லிக்கொள்வார்களா? அல்லது அவர்களை பிராமணர்கள் அல்லவென்று பொதுஜன அபிப்ராயமிருக்கிறதா? உலகத்திற்கு ஞானத்தை ஊட்டும் ஸ்ரீ சங்கராச்சாரியன் பிராமணபோஜனமிடும் பொழுது மேலேசொன்ன நபர்களை பிராமண போஜனத்திலிருந்து விலக்கி விடுகிறானா? இவ்

விஷயங்களை நன்றாய் யோசித்துப்பார்ப்போமே யானால் அதுவும் ஏமாற்றமாகவே முடியும்.

மற்றும் இந்த ஞானபோதகரான சங்கராச்சாரியார் உண்மைப்பிராமணன் யார் என்பதை அறியவில்லையா? குணத்தையும், தொழிலையும் பொறுத்துத்தான் ஜாதி என்பதை தெறிந்துகொள்ளவில்லையா, அல்லது தெறிந்துகொண்டே பித்தலாட்டம் செய்கிறாரு என்பதை அறிந்துகொள்ளும் விஷயத்தை பக்திமான்களுக்கே விட்டுவிடுகிறோம். மற்றும் பிராமணரல்லாதாரில்ஒருவரையாவது அப்பிராமண போஜனத்தில் சேர்த்துக்கொள்கிறார்களா? பிர்மக்கியானிதான் பிராமணன் என்று சொல்லி வினையமற்ற நம் பாமர ஜனங்களை மழுப்புவார்களே யானால் அந்த பந்தியில் உட்காருகிறவர்கள் எல்லாம் பிர்மக்கியானிகள் என்று தைரியமாய் பொய் சொல்ல முன்வருவார்களா? அப்படி பகிரங்கமாய் பொய் சொல்லமுடியுமா? ஒருசமயம் தைரியமாய் ஸ்ரீ சங்கராச்சாரியார் சொல்லிவிடுவாரானால், ஒருவன் பிர்மக்கியானியா, அல்லவா என்பதை எப்படி தெரிந்துகொள்வது? எப்படி நிர்ணயம் செய்வது? உண்மை பிராமணன் பொய் சொல்லுவானா? பணத்தின்பேரில் ஆசையிருக்குமா? ஸ்ரீ சங்கராச்சாரியாகிய நான் அன்னமிடும் மனிதர்கள் எல்லோரும், பிராமணர்கள், பொய்சொல்லாதவர்கள், உலகப்பற்றற்றவர்கள் என்று வாய் கூசாது சொல்வாரா? கடைசியாக தன்னையாவது நிச்சயமாய் நான் பிர்மக்கியானி, உண்மைபிராமணன், உலகப்பற்று எனக்கு கொஞ்சமேனும் கிடையாது என்று நெஞ்சின்மீது கைவைத்து, மனசாட்சியறிய சொல்வாரா? அப்படி சொல்லி

விடுவாராகில் ஒரு பணக்காரன் ஆயிரம் ரூபாய் பாத காணிக்கை தருவதாகச்சொன்னால் என் வீடு தேடி ஓடுகிறார் என்பதை யோசிக்குமாறு புத்திகெட்டு பக்திமேலிட்டிருப்ப வர்களை மிகவும் வணக்கமாக வேண்டிக்கொள்கிறேன்.

இதுவுமன்றி பிர்மக்யானிகளுக்கு பிராமண போஜன மிடும் பொழுது அக்கிரகாரத்திலுள்ள பார்ப்பனர்களுக்கு மாத்திரம் அப்பந்தியில் இடமளித்தால், மற்ற பார்ப்பனரல் லாதவர்களில் ஒருவர் கூட பிர்மக்யானியில்லையா? பார்ப்பன ரல்லாதவர்களெல்லாம் சர்வ முட்டாள்கள், ஞானமில்லாதவர் கள் என்று இந்த பகற்கொள்ளையடிக்கும் சங்கராச்சாரியின் அபிப்பிராயமா? அப்படி நான் நினைக்க வில்லையென்றால் பார்பனரல்லாதாரையும் அப்பந்தியில்கூட கலந்து உட்கார வைத்துத்தான் போஜனமளிக்கிறேன் என்று சொல்ல நாவு எழுமா?

ஏ! பார்ப்பன சூட்சியில் சிக்குண்ட பார்ப்பனரல்லாத மக்களே தூக்கத்திலிருந்து எழுங்கள், உங்களிடத்தில் காணிக்கையாக கொள்ளையடித்து, கூன், குருடு, முதலியவர் களுக்கு தர்மம் செய்யாமல், பந்துக்களே வாருங்கள் வாருங்கள், என்று அக்கிரகாரத்திலிருப்பவர்களை கூவி அழை த்து, இங்கு சில மடையர்கள் எனக்குப்பணம் கொடுத்திருக் கிறார்கள், அந்தப்பணத்திற்குத் தகுந்த அரிசி, பருப்பு, நெய், பால், தயிர் முதலியவைகளுக்கு லிஸ்ட்டு (List) போடுங்கள். திவ்யமாக சமைத்து விருந்துண்ணலாம் என்று சொல்வதை அறிந்து உங்கள் கண்களை திறவுங்கள், உங்கள் பணத்தையும்

பெற்றுக்கொண்டு உங்களை ஞானமில்லாதவர்கள், சூத்திரர்கள், தாசிமக்கள் என்று கருதிக்கொண்டு அதை வெளியில் சொல்லாமல் காரியத்தில் காட்டுவதை உணர்ந்து, அதற்கு வேண்டிய பரிகாரம் தேடுங்கள். இதைப்படித்தபிறகாவது பார்ப்பானுடையநயவஞ்சகப்பேச்லைசநம்பிஏமாறுமலிருங்கள்.

இதைப்போலவே அவரவர்கள் ஜாதிக்குருக்களும் வரி வசூலுக்கு வருவதைத்தவிர அவர்களால் ஜனங்களுக்கு என்ன நன்மை? அவர்கள் எப்படி சாதாரண ஜனங்களை விட சிறந்தவர்கள்? அவர்களுக்கு எதற்கு பணம் தருவது? அந்தப்பணத்தைக் கொண்டு அவ்வச் ஜாதியாரின் ஏழை குழந்தைகளுக்கு இலவச சம்பளம் தந்தருளினுல் ஆகாதா? இவைகளை எல்லாம் நன்ருய் யோசித்து நீங்கள் பாடுபட்டுத் தேடி பணத்தை உபயோகப்படும் வழியில் செலவிடுங்கள். நிற்க.

தொழிலையும், குணத்தையும் பொறுத்து ஜாதிஎன்பதையும் அதை இப்பொழுது பொதுஜனங்கள் அனுசரிப்பதும் வெளியாகிவிட்டது. வர்ணுச்சிரம தர்மத்தை இனிமேலே யாவது ஒழுங்காக அனுசரிக்க முடியுமா, அது அனுபவத்தில் அனுசரிக்கக்கூடியதா, என்பதை ஆராய்வோம்.

இப்படி நான்கு ஜாதியாய் பிரிப்பது சாத்தியமா?

உதாரணமாக ஒரு மனிதன் காலையில் எழுந்து பிர்மத்தை கொஞ்சநேரம் தியானிக்கிருன், பின்பு கடைக்குப்போய் வியாபாரம் செய்கிருன், பிறகு வீட்டில் குளிப்பதற்காக

தண்ணீர் இறைக்கிருன் என்று வைத்துக்கொள்வோம். இம்மனிதனை எந்த வருணத்தில் சேர்ப்பது? பிர்மத்தை தியானிப்பதால் பிராமணனு? வியாபாரம் செய்வதால் வைசியனு? தண்ணீர் இறைக்கும் வேலைசெய்வதால் சூத்திரனு? அல்லது அந்த ஒரேமனிதன் இம்மூன்று ஜாதியையும் சேர்ந்தவனு? இன்னும் அவன் யாருடனுவது சண்டையிட்டுக்கொள்ள நேர்ந்து விட்டால் நான்கு ஜாதியும் அவன்தானு? எவ்வளவு அர்த்தமற்றதாயும், நினைக்கமுடியாததாயுமிருக்கிறதுஎன்பதை வர்ணுச்சிரமத்திற்கு தத்துவார்த்தம், கிதா அர்த்தம், வேதார்தம் சொல்லுகிற புத்திமான்கள் கவனிக்கவேண்டியது. ஆனல் ஜாதி வேண்டுமென்று கவலையுள்ளவர்களில் பெரும்பான்மையோர், ஆணுக்கும், ஆணுக்கும், பெண்ணுக்கும், பெண்ணுக்கும், ஜாதி வித்தியாசம் பாராட்டுகிறுர்களே யன்றி, உயர்ந்த ஜாதி ஆண், கீழ்ஜாதி என்னும் அழகிய பெண்ணிடத்திலும், உயர்ந்த ஜாதிப்பெண்கள் என்பவர்கள் கீழ்ஜாதி என்னும் அழகிய வாலிபர்களிடத்தில் ஜாதி வித்தியாசம் பாராட்டுவதில்லை என்பதைப்பற்றி ஒரு அளவுக்கு சந்தோஷப்படுகிறேம்.

மற்றும் குணத்தை பொறுத்து ஜாதி என்னும் விடயத்தையும் துருவிப்பார்ப்போம். ஒரு மனிதனுக்கு குணமானது இளமையிருந்து கிழப்பருவம், சாக்காடு வரை மாருமலிருக்கிறதா என்று பார்ப்போமேயானல் அநேகமாய் மாறக்கூடியதாகவேயிருக்கிறது. ஆகையால் ஒரு மனிதன் இந்த நான்கு ஜாதியாகவுமிருக்கக்கூடும். குறிப்பிட்ட கீதா சுலோகத்தின்படி குணம் தொழில் மாறுதலினல் ஜாதி மாறுதலடைந்தே

தீரவேண்டும். ஆகையால் எந்த மனிதனையும் நிச்சயமாய் இன்ன ஜாதியைச்சேர்ந்தவனென்று சொல்லமுடியாது. அதுவுமல்லாமல் புருஷன், மனைவி, இவ்விருவருக்கும் குண பேதமிருக்கலாம். ஆகையால் புருஷனும், மனைவியும், ஒரே ஜாதிதான் என்று சொல்லவியலாது. இருவர் குணமும் ஒத்திருந்தால் இருவரும் ஒரே ஜாதி என்று சொல்லலாமோ, என்றால் தொழிலும் ஒன்றாகவே இருக்கவேண்டும். அதுவு மன்றி இவ்விருவருடைய குணமும், தொழிலும் சாகும்வரை மாறாமலிருக்கவேண்டும். இவைகளையெல்லாம் பார்த்து ஜாதி பிரிப்பது சாத்தியமா? ஜாதி பிரிப்பதற்காக தனிலாகா அரசாங்கத்தாரே ஏற்படுத்தினாலும்கூட தொழிலைப்பொறுத்து பிரிப்பது ஒருவாறு சாத்தியமானாலும், யார் யாருடைய குணம் எந்தெந்த சமயத்தில் எப்படி, எப்படி மாறுகிறது என்பதை யார்தான் கண்டுபிடித்து ஜாதி வாரியாகப்பிரிக்கமுடியும்? மற்றும்சகோதர, சகோதரிகளுக்குள்ளும் குணபேதங்கள் இருக்குமே. இப்படி ஜாதி பிரிப்பதே முடியாதகாரியமாயிருக்கும்பொழுது, அம்முறையை அனுஷ்டானத்திற்கு கொண்டு வருவது எவ்வாறு முடியும்? இவ்விஷயத்தைக் கிளறிப்பார்ப்போமேயானால் பெரும் நகைப்பாகவே முடியும். இவ்வித நகைப்புக்கிடமானதும், அர்த்தமற்றதும், உலக வாழ்க்கையில் பயன்படுத்த முடியாததுமான வர்ணாச்சிரம முறையை கிருஷ்ணபகவான் கீதையில் சொல்லித்தான் இருக்கிறார். அர்த்தமில்லாதவைகளையும் கடவுள் வெளியிடுவார் போலும்.

இதில் இனி யோர்விஷயம் கவனிக்கத்தக்கது. அதாவது இதை எழுதினவர் கடவுளாயிருந்தால் “ நான்குவர்ணத்

தையும் நான் படைத்தேன்" என்று சொல்லியிருப்பதால் உலகில் இந்தியாவைத்தவிர மற்ற எல்லாவிடங்களிலும் இந்த நான்கு வருணத்தார் இல்லாததற்குக்காரணம் என்ன? இந்த இடத்தில் கடவுள் சொன்னது என்ற புறட்டு வெளியாகின்றதல்லவா? தற்பொழுதிருக்கும் நூற்றுக்கணக்கான ஜாதிகளை எந்தக்கடவுள் படைத்தது என்பது விளங்கவில்லை. இந்த நான்கு ஜாதிகளும் எல்லாவிடத்திலும்இருக்கிறதென்று, சாதாரணமாகத் தத்துவார்த்தம் சொல்லி ஏமாற்றுகிற மாதிரி மழுப்புவார்களேயானால் உலகத்தில் எல்லாப்பக்கங்களிலும் நான்குவருணத்தார் இருக்கிறமாதிரி இந்தியாவிலும் இருந்து கொண்டுபோகட்டும். அதற்கு பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற பதங்களே அவசியமில்லை. அதற்காக வர்ணாச்சிரம தர்மம் வேண்டுமென்று மகாத்மாக்களும், வர்ணாச்சிரம தர்மிகளும் கவலைப்படவேண்டியதுமில்லை. (என் வருணாச்சிரமம் வேறு) என்று கூற அவ்வளவு சிறமம் எடுத்துக்கொள்ளவேண்டியதும், வர்ணாச்சிரம மகாநாடுகள் கூடவேண்டியதும் அவசியமில்லாததாகும்.

இவைகளன்றியே உலகத்தில் வருணாச்சிரமம் நடந்து வரும்பொழுது இந்தியாவிலும் நடக்காமல் போய்விடுமா? மேலும் கிருஷ்ணபகவானால் உண்டாக்கப்பட்டதை யார் தான் அழிக்கமுடியும்? வர்ணாச்சிரம தர்மிகளும், திருகாந்தியாரும் இவ்வளவு கவலை எடுத்துக்கொண்டதற்குக்காரணம் கிருஷ்ணபகவானுடைய தெய்வாம்சத்தில் அவநம்பிக்கை கொண்டுவிட்டார்களென்பது நன்றாய் விளங்குகிறது.

இன்னும் இந்தக் கீதை எழுதினவன் ஒரு ஜாதிக்காரன் சுகமாய் இருக்கவும் ஒரு ஜாதிக்காரன் கஷ்டப்படும்படியாக வும் கெட்ட எண்ணத்துடன் எழுதிவைத்திருக்கிறான் என் பது கீழ்குறிப்பிடும் சுலோகத்தில் நன்குவிளங்கும். பாமர மக்களை மயக்கவும், ஏமாற்றவும் முதலில் தொழிலைப்பொ ருத்து ஜாதி என்று பொதுப்படையாக எழுதிவைத்துவிட்டு சூட்சியாக மற்றோரிடத்தில் எழுதிவைத்திருப்பதையும் கவனி யுங்கள்.

பகவத் கீதை அத்யாயம் 3 பாட்டு 35

"ஸ்ரேயான் ஸ்வதாமோ விகுணபாதர்மாத் ஸ்வனுஷ்
டிதாத் ஸ்வதர்மே நிதனம் ஸ்றேயா பாதர்மோ பயாவஹ"

பொருள்:— "ஒரு ஜாதியான் மற்றொரு ஜாதியான் கர்ம த்தை எவ்வளவு ஒழுங்காக நடத்தினாலும் அது நன்மையைப் பயக்காது. ஆதலால் ஒவ்வொரு ஜாதியானும் அவனவன் தொழிலையே இயன்றவாறு செய்துமுடிப்பதே சிறந்தது தன் தொழிலைச் செய்யாவிடினும் பாதகமில்லை. பிறர் தொழில்பயத்தையுண்டுபண்ணக் கூடியதாகையால் அதைச் செய்யலாகாது."

முதலில் சொன்ன சுலோகத்தில் தொழிலையும் குணத் தையும் பொருத்தது ஜாதி யென்று சொல்லிவிட்டு இந்த சுலோகத்தில் சூட்சியாகவும், பகிரங்கமாகவும், மோசடியாக வும், தோசைதிருப்பினால்போல் தைரியமாய், ஜாதியைப் பொருத்து தொழில் செய்யவேண்டுமென்று சொல்வதை யும், வற்புறுத்துவதையும், அறிவாளிகள் ஆராய்ந்து தெளிவுற வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த சூத்திரத்தின்படி சூத்திரன் என்போன் சூத்திர னுடைய விதிப்படி படியாமல் தற்குறியாயும், எல்லோருக் கும் நாயைப்போல் வேலைசெய்துகொண்டும், அவர்களுடைய எச்சில்களை உண்டுகொண்டும் தன் மனைவியர்களை மற்ற மூன்றுஜாதியார்கள் அனுபவிக்கப் பார்த்துக்கொண்டும் இருக்கவேண்டியதைத்தவிர வேறு ஜாதியார்கள் செய்யும் தொழில்களை, அதாவது வியாபாரம் செய்யவாவது, நாட்டை ஆளவாவது, படிக்கவாவது கூடாது என்று தெளிவாக சூழ்ச்சியாகச் சொல்லுகிறதல்லவா? இதுதான் சூத்திரன் என்போனுக்கு விதித்ததில் தன் தொழிலைச்செய்யக்கூடிய காரியம். என்ன மோசம்! என்ன பரிதாபம்!! என்னே கீதை எழுதினவரின் எண்ணம்!!!

சூத்திரனைத்தவிர மற்ற மூன்று ஜாதியார்கள், சூத்திரன் நெற்றி வெயர்வை நிலத்தில்விழ வேலைசெய்த பலனை பங்கிட் டுக்கொள்ளவேண்டியது.

சூத்திரனுடைய பெண் அழகியவளாகவிருந்தால் அவ ளும் அவர்களுக்கு உரியவளே, அதிலும் பார்ப்பானுக்குப் பங்கு அதிகம்.

பார்ப்பான் ராஜபத்னிகள்முதற் கடைசிவரை அனுப வித்துக்கொண்டு பிரம்மக்யானியாய் இருக்கவேண்டியது. இவ்வளவு கொடுமையையும் வெளிக்குக்காட்டாமலும், படிப்பவர்கள் ஏமாறுகிறமாதிரி சாமர்த்தியமாய் பகவத்கீதை யில் எழுதிவைத்தவர் பலே கெட்டிக்காரர், பார்ப்பனரல்லா தாரின் கழுத்தையறுக்கும் பலே தங்கக்கத்தி என்று சொல் லித்தீரவேண்டியிருப்பதற்கு வருந்துகின்றேன்.

நான் வாசகர்களை இக்கட்டுறை முடிவில் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறதென்னவெனில் ஜாதி என்பதை ஒழித்து விடுவதில் பொதுவாக மனிதசமூகத்திற்கும், குறிப்பாக நாட்டிற்கும் நன்மையுண்டாவதன்றி மனித இன்பத்திற்கு ஒரு இணையிலாத்துணையாகவுமிருக்கும் என்பதை நீங்கள் உறுதியாக ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

பின்னும் உங்களுக்கு ஜாதி விஷயத்தில் நம்பிக்கையிருக்குமானால் சூத்திர ஜாதி என்று சொல்லும் ஒரு ஆடவனையும் பிராமண ஜாதி என்று சொல்லும் ஒரு பெண்ணையும் புணர்ச்சியிலீடுபடச்செய்து கற்போற்பத்தியாகின்றதா? இல்லையா? என்பதை அனுபவ ரீதியாகத் தெரிந்துகொண்டு அதற்குப்பின் ஜாதியில்லையென்று உங்களுக்கே தோன்றுமாகில் ஜாதியைதைரியமாய் ஒழிக்க முற்படுவீர்களாக.

பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சி தோலெலும் பிலுமிலக்கமிட்டிருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம்வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்து பாருமும்முளே.
(சிவவாக்கியர்.)

சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெலாய்
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ
காதில் வாளி காரைகம்பி பாடகம் பொனென்றலோ
சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே.
(சிவவாக்கியர்.)

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் இட்டார் பெரியோர் ரிடார் இழிகுலத்தோர் பட்டாங்கிலுள்ளபடி.
(ஔவை பிராட்டி.)

பகுத்தறிவு.

பகுத்தறிவு என்பதைப்பற்றி விவரிக்குமுன் பகுத்தறிவு என்பது என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டியது முக்கியமாகும். முதலில் ஒரு மனிதன் பற்பல விஷயங்களை கல்வி கேள்விகளால் அறிந்த பின்னர், அவ்விஷயத்தைப்பற்றி தனிப்பட்ட முறையில் தர்க்கித்துப்பார்ப்பது பகுத்தறிவை உபயோகப்படுத்துவதாகும். ஒரு விஷயத்தை தர்க்கித்து, துண்டித்து, பாகுபாடு செய்து பகுத்து அறியச்செய்வது பகுத்தறிவாகும்.

இப்படிப்பகுத்தறியும் சக்தி மனுதனுக்கு பிரத்தியேகமாகவுண்டு. ஆனால் அநேகர் அதை உபயோகிக்காமலிருப்பதைக்குறித்து வருந்தாமலிக்கமுடியாது. மனிதனுக்கு ஆறு அறிவு உண்டென்பதும், அதில் பகுத்தறிவு என்னும் ஒரு அறிவு மனிதனுக்கு மேன்மையை அளிக்கக்கூடியது என்பதும் அறிந்ததே. அவ்விதமிருக்க பகுத்தறிவை உபயோகப்படுத்தாதவர்களையும், உபயோகப்படுத்த முன்வாராதவர்களையும், அப்படி உபயோகப்படுத்துவது பாவமென்று கருதுவோர்களையும் மனிவர்க்கத்தில் சேர்ப்பது முறையன்று. மனிதன் என்பதற்கறிகுறியாகவுள்ள பகுத்தறிவை புறக்கணித்த மனிதன் ஆறு அறிவைக்கொண்ட மனிதனென்று சொல்லிக்கொள்வது பொருந்தாது. ஆகையால் ஒவ்வொருவரும் மனிதனாக வேண்டுமானால் பகுத்தறிவை தாராளமாக உபயோகப்படுத்தவேண்டும்.

மனிதனுக்கு அரிய பொக்கிஷம் யாதெனில் அறிவு என்றே சொல்லவேண்டும். அறிவு மனிதனுக்கு வந்திடுமகில், அவனிடத்தில் அன்பு உண்டாகும். அன்பு உண்டானல் யாவரிடத்திலும் இரக்கம் காட்டக்கூடியவனகிருன். பிறகு அவன் வாழ்க்கையில் துன்பமில்லாமல் வாழ்வதற்கு வழி ஏற்படுகின்றது. அப்படி சிற்சில சமயங்களில் துன்பமுண்டானலும் அதை சமாளித்து சாந்தமடையக்கூடிய வழி அறிவுள்ளவன் தேடிக்கொள்வான். நியாயமான முறைக்கு அவன் உயிரை இழக்கவும், மற்றென்ன தியாகங்கள் செய்யவும் மயங்கமாட்டான். மேலே குறிப்பிட்ட உயர்ந்த குணங்கள் ஒருவனுக்கு அமையவேண்டுமானல் அவன் அறிவு என்பதை அடையவேண்டும். இத்துடன் நம்பெரியார்களும் மற்றும் அநேகர் அறிவு என்பதைபற்றி விசேஷமாக கூறியுள்ளார்கள். பல பெரும் அறிஞர்களும், பெரியார்களும் அறிவைப்பற்றி, அறிவே தெய்வமென்றும், அறிவே ஞானமென்றும், அறிவே சற்குருவென்றும், பாடியும் எழுதியும் வைத்திருப்பதை அறிந்திருப்பீர்கள். உலகத்தில் நேர்மையாகவும், சந்தோஷமாகவும் வாழ்வதற்கும், அன்பும் அமைதியோடிருப்பதற்கும் மனிதருக்கு வழிகாட்டியாக அறிவு அவசியத்திலும் அவசியம். மனிதனகப்பிறந்த ஒவ்வொருவருக்கும் அறிவு மற்றெல்லாவற்றைக்காட்டிலும் பிரதானமானது. ஆகையால் மனிதன் அறிவைப்பெற முயல்வது இன்றியமையாததாகும். அறிவை அடையமுயலும், ஒருவனுக்கு முக்யமாகவேண்டுவதென்ன, கருவிஎன்ன, அறிவு கிட்டுவதற்கு மார்க்கமாகவுள்ள சாதனம் யாது, என்று பார்க்குமிடத்து பகுத்

தறிவு என்பது தெரியவரும். பகுத்தறிவு என்பதும் விசாரணை என்பதும் ஒன்றே. தனக்குள்ளேயே ஒருவிஷயத்தை ஊன்றி ஆராய்வதே விசாரணை. "இந்த ஞானந்தான் எய்தியது எவ்விதமென்றால் இடைவிடா விசாரத்தாலே," என்றதிலிருந்து அறிவிற்கும், ஞானத்திற்கும், விசாரணை ஆராய்ச்சிதான் காரணம். அறிவிற்கு பகுத்தறிவுதான் மூலபலம், அறிவு என்னும் ஆற்றிற்கு பகுத்தறிவு என்னும் ஊற்று அவசியம், பகுத்தறிவு என்னும் வித்து இல்லையேல் அறிவென்னும் மரமுமில்லை, என்பது குன்றின்மேலிட்ட தீபமென யாவரும் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

பகுத்தறிவு என்பது எப்பொழுது ஏற்படும், ஆராய்ச்சி என்பது எப்பொழுது உண்டாகும், விசாரணை எப்பொழுது துவங்கும், என்று பார்ப்போமேயானால், நெடுநாள் நம்பிக்கை வைத்திருந்த ஒரு விஷயத்தில் சந்தேகமுண்டானவுடன், பகுத்தறிவிற்கும், நம்பிக்கைக்கும் விவாதம் ஏற்படும், பழய நம்பிக்கையின்பேரில் உண்டாகும் சந்தேகம் அறிவு உதயத்திற்கு அறிகுறி என்னலாம். அச்சமயத்தில் பழைய நம்பிக்கையை முன்னோர்கள் நம்பிவந்ததை அல்லது கடவுள் வாக்கு என்பவைகளின்மீது நாம் சந்தேகங்கொள்வது தவறு என்று நினைப்பவரும், அப்படி சந்தேகிப்பது பாவமென்று அஞ்சுவோரும், அவைகளை நாம் சந்தேகிப்பதற்கு அருகரல்ல, முன்னோர்களைவிட நாம் அறிவாளிகளா வென்று பின் வாங்குவோரும், அஞ்ஞானத்தில் ஆழ்ந்து, மூடநம்பிக்கை யுள்ளவர்களாகி, மூடபக்தியிலீடுபட்டு அறிவு சூன்யர்களாகத் திரிவார்கள் என்பது பிரத்தியட்சம். ஆகையால் நம்பிக்கை அல்லது

பிடிவாதமான நம்பிக்கை அறிவிற்கு நேரான எதிரி என்றே சொல்லவேண்டும். முன்னோர்களில் அநேகர் மதம், கர்மம், ஜென்மம், மோட்சம், நரகம் முதலியவைகளின் பேரில், மக்கள் சந்தேகங்கொள்ளாமல் அவைகளைக்காப்பாற்ற வேண்டுமென்ன நோக்கத்துடன் மத நம்பிக்கைகளை நம்பாதவர்களுக்கு நரகமென்றும், "நம்பினவருக்கு நடராஜா, நம்பாதவருக்கு எமராஜா" வென்று பலவாறு சொல்லி மக்களை பயமுறுத்தி ஏமாற்றி அர்த்தமற்ற வேத, சாஸ்த்திர, புராணங்களையும், புகழச்செய்தும், கல் செம்பு விக்கிரகங்களை வணங்கச்செய்தும், வந்தார்கள், வருகிறார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுடைய பகட்டுகளெல்லாம் மலையேறிவிட்டது. மக்கள் தற்பொழுது தைரியமாய் எதையும் தர்க்கித்துப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். வெகுகாலத்திற்கு முன்னமேயே கல்லுச்சாமிகளையும், கோவில்களையும் கட்டுக்கதையாகிய வேதசாஸ்திர புராணங்களையும் பல பெரியார்கள் கண்டித்து, ஜாதி பேதத்தையும் கண்டித்து பாடியும் எழுதியும் வைத்திருக்கிறார்கள்.

கோயிலாவதேதடா குளங்களாவதேதடா கோயிலும் குளங்களும் கும்பிடுங் குலாமரே கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே ஆவதும் மழிவது மில்லை யில்லை யில்லையே.

(சிவவாக்கியர்.)

பூசை பூசை யென்று நீர் பூசை செய்யும் பேதைகாள் பூசையுள்ள தன்னிலே பூசை கொண்ட தெவ்விடம், ஆதி

பூசை கொண்டதோ வனுதி பூசை கொண்டதோ எது பூசை கொண்டதோ வின்னதென்று யப்புவீர்.

(சிவவாக்கியர்.)

இருக்க நாலு வேதமுமெழுத்தைஅற வோதிலும் பொறுக்க நீறு பூசிலும் பிதற்றிலு ம்பிரானி ரான் உருக்கி நெஞ்சையுட்கலந்து உண்மை கூற வல்லிரேல், சுறுக்கமற்ற சோதியை தொடர்ந்து கூடலாகுமே.

(சிவவாக்கியர்)

காலை மாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்
காலை மாலை நீரிலே கிடந்ததேரை யென் பெறும்.

(சிவவாக்கியர்.)

பண்ணிவைத்த கல்லையும் பழம் பொருளதென்று நீர், எண்ணமுற்று மென்ன பேருரைக்கிறீர்களேழைகாள், பண்ணவும் படைக்கவும் படைத்து வைத்தளிக்கவும், ஒண்ணு மாகியுகைளித்த வொன்றை நெஞ்சிலுன்னுமே

(சிவவாக்கியர்.)

ஊரிலுள்ள மனிதர்களொருமனதாய் கூடியே, தேரிலே வடத்தையின்று செம்பைவைத்திழுக்கிறீர், ஆரினாலுமறி யொணாத வாசிதித்த நாதரை பேதையான மனிதர் பண்ணும் புரளிபாரும் பாருமே.

(சிவவாக்கியர்.)

சட்டையிட்டு மணிதுலங்குஞ் சாத்திர சுழக்கரே, புஸ்தகத்தை மெத்தவைத்து போதமோதும் பொய்யரே, நிட்டை

யேதுஞானமேது, நிரிருந்தவக்ஷரம், பட்டையேது சொல்லிரே பாதகக்கபடரே.

(சிவவாக்கியர்.)

ஓசையுள்ள கல்லை நீ யுடைத்திரண்டாய் செய்துமே
வாசலில் பதித்தகல்லை மயங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்குவைத்த கல்லில் பூவும் நீருஞ் சாத்துறீர்
ஈசனுக்குகந்த கல் லெந்த கல்லு சொல்லுமே.

(சிவவாக்கியர்)

தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடியோடுந் தீதரே.

(சிவவாக்கியர்.)

நட்டகல்லை தெய்வமென்று நாலு புஷ்பஞ்சாற்றியே, சுற்றிவந்து மொண மொணன்று சொல்லு மந்திர மேதடா, நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில், சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ.

(சிவவாக்கியர்.)

கல்லிலும் செம்பிலு மாயிருப்பாய் என் கண்ணுதலே.

(பட்டினத்தடிகள்.)

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையற புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன் உயர் பொன்னெனவே.

(பட்டினத்தடிகள்)

உளியிட்டகற்சிலையி லுண்டோவுணர்ச்சி
உலகத்தில் மூடர்களுக் குண்டோவுணர்ச்சி

புளியிட்டசெம்பிற்குற்றம் போகுமேவஞ்ஞானம்
போகாதுமூடர்க்கென் றூடாய்பாம்பே.

(பாம்பாட்டி சித்தர்.)

எட்டிச்சுரக்காய்கறிக் கெய்திடாதுபோல்
எண்டிசைதிரிந்துங்கதி யெய்தலில்லையே
நாட்டுக்கொருகோயிற்கட்டி நாளும்புசித்தே
நாதன்பாதங்காணார்களென் றூடாய்பாம்பே.

(பாம்பாட்டி சித்தர்.)

சதுர்வேதமாறுவகை சாஸ்திரம்பல
தந்திரபுராணங்கலை சாற்றுமாகமம்
விதம்விதமானதான வேறுநூல்களும்
வீணான நூல்களென் றூடாய்பாம்பே.

(பாம்பாட்டி சித்தர்.)

பூசைசெய்ததால்சுத்த போதம்வருமோ
பூமிவலஞ்செய்ததனாற் புண்ணியமுண்டோ.

(பாம்பாட்டி சித்தர்.)

தேறித்தெளிவதற்கே அகப்பேய்
தீர்த்தமுமாடாயே.

(அகப்பை சித்தர்.)

மந்திரமில்லையடி அகப்பேய்
வாதனையல்லவடி.

(அகப்பை சித்தர்.)

தந்திரமில்லையடி
சமயமழிந்ததடி. அகப்பேய்

(அகப்பை சித்தர்.)

பூசைபசாசமடி
போதமேகோஷ்டமடி அகப்பேய்

(அகப்பை சித்தர்.)

இவ்வாறு அறிஞர்கள் விக்ரக ஆராதனையை கண்டித்துள்ளார்கள். அப்படியிருந்தும் விக்கிரக வணக்கத்தின் மூல்யமாக பயனடையும் கூட்டத்தார், மக்கள் மூடநம்பிக்கையின் பொருட்டாக தம் வாழ்வை நடத்தும் சோம்பேறிகள், அவ்வறிஞர்கள் சொன்னவைகளெல்லாம் ஞானிகளுக்கென்றும், சாதாரணமனிதர்களுக்கு விக்கிரக ஆராதனை அவசியம் என்றும், படிப்படியாகத்தான் மேலே போகவேண்டுமென்றும், வெகு சுளுவாக பாமரமக்களை ஏமாற்றுவதில் இதுவரையில் சித்தியடைந்துள்ளார்கள். அவர்கள் பாமரமக்களிடத்தில் பேசும்பொழுது எதையும் நம்பவேண்டும் மென்றும், சந்தேகிப்பது தவறு என்றும் முதலிலேயே பீடிகைபோட்டுக்கொண்டுதான் பேசுவார்கள். ஏனென்றால் அவர்கள் சொல்லுவதெல்லாம், மூடநம்பிக்கை கொண்டிருப்பவர்கள் தான் செவிகொடுத்து கேட்கமுடியுமேயன்றி, அறிவோடு ஆராய்வோருக்கு நகைப்பிற்கிடமானதாகவே இருக்கும். அவர்கள் சொல்லும் பொய்களுக்கு எல்லையே யில்லை. இனிமேல் உலகில் ஏதாவது ஒரு பொய் சொல்லவேண்டுமென்றால் அந்தப் புராணப்பொய்களஞ்சியத்திலிருந்துதான் கடன்வாங்கவேண்டியதாக நேரிடும். இது இருக்க,

நாம் ஒரு விஷயத்தில் சந்தேகமுண்டானபோதுதான் நாம் யோசிக்கத்துடங்குவோம். அப்பொழுதுதான் யோசியாமல் துருப்பிடித்திருந்த மூளையானது, சுத்தமாகி அறிவுடன் பிரகாசிக்கும். அப்படியிருக்க நாம் ஒன்றின்மீது பிடிவாதமான நம்பிக்கையோடிருப்பது தவறு. அப்படி நம்பிக்கையோடிருந்தாலும், நடுநிலைமையிலிருந்து யோசிக்கும்பொழுது, அது அறிவுக்குபொருத்தமில்லாமலிருந்தால், பாட்டன், முப்பாட்டன் அல்லது எவ்வளவு பாட்டன்கள் காலத்திய நம்பிக்கையானாலும், பழக்க வழக்கமானாலும், புராதீனக் கொள்கையானாலும் அதைநீக்கி காலத்திற்கேற்றவாறு சீர்படுத்திக்கொள்ளவேண்டும். நம் பெரியார்கள் மாடுகளின் பேரில் சவாரிசெய்துகொண்டிருந்தார்கள். தீயை உண்டாக்குவதற்கு சக்கி முக்கிக் கல்லை உபயோகப்படுத்திக்கொண்டிருந்தார்கள், பொக்கிஷத்தை அடியிலுள்ள மண்பாண்டத்தில் வைப்பார்கள். நாம், மோட்டார்களும், ரயில்களும், ஆகாய விமானங்களும் மணிக்கு நூறுமைல் இருநூறுமைல் வேகம் போய்க்கொண்டிருக்கும் காலத்தில், மாடுகளின் பேரில் ஏறிக்கொண்டு பிரயாணம் செய்ய முடியுமா? இரும்பு பெட்டிகளும், ஸ்டீல் டிரங்குகளும் இருக்கும்காலத்தில் மண்பாண்டத்தில் பணத்தைவைக்க முடியுமா? நினைத்த மாத்திரத்தில் தீயை உண்டாக்கக்கூடிய தீப்பொட்டிகளும், எலக்டிரிக் ஸ்பார்க்கும் இருக்கும் காலத்தில் சக்கி முக்கி கற்களை தட்டிக்கொண்டிருக்கமுடியுமா? காட்டிலுள்ள பருத்தியைப் போட்டால் பருத்திக்கொட்டை வேறு, பஞ்சுவேறாகி மிஷினிலேயே நூலாக்கப்பட்டு, நெசவு செய்யப்பட்டு, பிறகு

அந்துவே மடித்து, பிறகு அதுவேபேல், பேலாக கட்டித்கள் ளும் மிஷின்கள் இருக்கும் தற்சமயத்தில் பூராதன, மனித அறிவு விர்த்தியாகாத காலத்தில் சுற்றின ராட்டினத்தைக் கொண்டு சுற்றுவது என்பது மனிதவர்க்கத்தை பிற்போக்குக் கொண்டுபோவதல்லவா? இம்மாதிரியான புராதீனத்தில் நம்பிக்கையும், நட்பையும், தெய்வீகத்தன்மையும் வைத்திருக்கும் மக்கள் முன்போக்கடைவது அசாத்தியமாகும். நிற்க.

சிலர் மூடநம்பிக்கையினுல், அநேக நன்மையுண்டு, தவருன வழியில் நடந்தால் கடவுள் தண்டிப்பார் என்பதைக் கருதி மக்கள் தீமையான வழியில் நடக்கமாட்டார்கள், கடவுள் ஒருவர் உண்டென்று பாமர மக்கள் அறிவதற்கு விக்கிரக ஆராதனை அவசியம் என்று சொல்ல முன்வரக்கூடும். இக்கருத்தை ஆழ்ந்து யோசியாமல் வெகு இலகுவாக அநேகர் ஒத்துக்கொள்ளவுங்கூடும்.

ஆனுல் தெளிவாக ஆராய்ந்து பார்த்தால் மூடநம்பிக்கையின் பொருட்டு ஜனசமூகத்திற்கு உண்டாகும் நன்மையைவிட பல்லாயிரமடங்கு தீமை அதிகம் என்பது பெறலாம். உதாரணமாக மூடநம்பிக்கையால் உண்டாகும் சொற்ப நன்மையைக் கருதி, எங்கும் பறந்த, நீக்கமற நிற்கின்ற ஓர் சக்தியை ஒரு சிறு உருவத்திலமைத்து அதைவணங்கச்செய்வதால், அதில் வரும், வந்ததீமைகளை எடுத்துரைத்தாலேயே மூடநம்பிக்கை எப்பொழுதும் ஆபத்துக்கிடமானது என்றும், மக்கள் கொண்டிருக்கும் அம் மூடநம்பிக்கையின் பயனுய், மக்கள் நொடிப்பொழுதில் யாவரிடத்திலும் ஏமாறக்கூடிய

வர்களாக ஆகிதங்களறிவை இழந்து எடுப்பார் கைப்பிள்ளை களாக அவதிப்படுவார்கள் என்பதனும் எடுத்துச்சொல்ல வேண்டுவதில்லை.

கோவிலொன்று கட்டி அதில் ஓர் ஆண் விக்கிரகத்தை வைத்தவுடன், மூடநம்பிக்கை கொண்டமக்கள், அவர்களுக்கு இருக்கும் உணர்ச்சிகள் யாவும் அவ்வுருவத்திற்கு உண்டெ‌ன நினைத்து, அதற்கு ஒரு பெண் விக்கிரகத்தை அருகில் வைக் கிறார்கள். பிறகு அதற்குவேண்டிய நகைகள், ஆடைகள், உடுத்தி அவ்விருவிக்கிரகங்களுக்கும் கல்யாணம் செய்து வைக்க ஆரம்பித்து, பெண் சாமிக்கு தாலியையும் கட்டி, அவ் விரண்டு விக்கிர்கங்களையும் பெண்மாப்பிள்ளை போல் தேரில் ஊர்வலம் செய்து, வாணக்காட்சிகள் நடத்தி, போருக் குறைக்கு மஞ்சநீரும் ஆடுகிறார்கள். சாமி திருட்டுத்தன மாக தாசிவீட்டுக்கு போவதும், பிறகு ஆண்சாமி திரும்பி வரும்பொழுது பெண்சாமி கோபித்துக்கொண்டு கதவை திறக்காமலிருப்பதையும், பகிரங்கமாக திருவிழாக்கள் நடத் துகிறார்கள். ஆண்சாமியை பெண்சாமியையும் பள்ளியறை யில் போகம்செய்யவிட்டு தாம்பூலாதிகளை அங்குவைக்கிறார் கள். பள்ளியறையில் காலையில் அய்யனும், அம்மாளும் தாம்பூலம் தரித்து, எச்சில் உமிழ்ந்து வைத்திருப்பதை கண் ணாரக்கண்டதாக சில கனவான்கள் சொல்லுவதையும், அதை யும் அநேகர் நம்பும்படியாகச் செய்த அந்த மூடநம்பிக்கை யின் சக்தியையும் பார்க்கவும், கேட்கவும் மிக விந்தையாகவே இருக்கிறது. கடவுளுக்கு அறிகுறியாக யாதோ ஒரு கல் இருந்துகொண்டு போகட்டுமென்றிருக்க, முதற் முதற்

கோணை முற்றிலுங் கோணை என்பதை யொப்ப, எழுதமுடியாதபடியாகவுள்ள அக்கிரமங்கள் அநேகமும், எழுதக்கூடாத அடாதசெயல்கள் கணக்கற்றவைகளும், நடைபெறுவதுமன்றி மூடத்தனமாக அநேக கோடிக்கணக்கான திரவியங்கள் நாசமுமாயின, நாசமாக்கப்பட்டும் வருவதை நிரூபிக்க வேண்டுவதில்லை.

உவமையில்லாத ஓர் பொருளுக்கு அறிகுறியாக ஒரு கல்லைவைப்பதே ஒரு பெரும் தவறு. அச்செய்கையை தவறு என்று நான் சொல்லுவதினல் தவருய்ப்போகுமா வென்று சிலர் ஆத்திரத்தோடு கேட்கலாம். அதற்கு பணிவாக நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதென்ன வென்றல், நான் சொல்லுவதிலிருந்து ஒரு விஷயத்தை முடிவுசெய்யவேண்டியதில்லை, நடைமுறையில், அனுபவத்தில் அச்செய்கை தவருய் முடிகிறதா, பலனடைகிறதா என்பதை கவனித்தாலே விளங்கிவிடும் என்பதேயாகும்.

விக்கிரக ஆராதனையானது எவ்வளவுதூரம் மக்களை மடமையில் ஆழ்த்தியிருக்கிறதென்பதற்கு ஒரு சிறு கதையை உதாரணமாக சொல்ல விரும்புகிறேன்.

ஓர் கிராமத்தில் ஓர் குடியானவன் இருந்தான். அவனுக்கு ஒரு பட்டிநிறைய ஆடுகளிருந்தன. அவனுடைய ஆஸ்தி ஆடுகள்தான். இப்படியிருக்க அவனுக்கு ஒரு நாள் உடம்புக்கு நோய்வந்துவிட்டது, உடனே அவன் சாமியை வேண்டிக்கொள்ள ஆரம்பித்து சத்தமான தொனியில்

"சாமியே எனக்கு உடம்பு சௌகரியமானால் உங்களுக்கு பட்டியுடன் ஆடுகளைப்பொங்கல் வைக்கிறேன்" என்று சொன்னான். அதற்கு அருகிலிருந்த அவன் பெண்ஜாதி "என்ன இப்படிச்சொல்லி கும்பிடுகிறாயே, எல்லா ஆடுகளையும் வெட்டிவிட்டால் நாம் பிழைப்பதெப்படி" ஏதோ ஒன்றிரண்டு ஆடுகளை வெட்டுவதாக சொல்லிக்கும்பிடுங்கள் என்று சொன்னாள். அதற்கு அந்தக்குடியானவன் "அடி பைத்யக்காரி, நான் அப்படித்தான் சொல்லிக்கும்பிடவேண்டும், எனக்கு முதலில் சௌகரியமாகட்டும். சாமிக்கு ஆட்டினுடைய மயிர்கூடகாண்பிக்கமாட்டேன்" என்று ரகசியமாக சொன்னானாம்.

சாமியினுடை கதி இவ்வாறுவந்ததிற்குக் காரணம் விக்கிரக ஆராதனையேயாகும். சாமியை யாவரும் வியாபாரமுறையில் கும்பிடுகிறார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்கதே. குறித்த காரியம் அதாவது வியாஜியம், கல்யாணம், நோய், பூமி முதலியவைகள் அனுகூலமானால் கோபுரம்கட்டுகிறேன், அபிஷேகம் செய்கிறேன், காணிக்கை (லஞ்சம்) தருகிறேன் என்று சொல்லிக்கும்பிடுவது சகஜமாகவிருக்கிறது. இந்தமுறையில் மக்கள் கடவுளொன்று இருக்கிறது என்று நம்புவதைவிட, நம்பாமலிருப்பதே சிலாக்கியமாக தெரிகிறது. சாமிக்காக பொட்டுக்கட்டிவிடும் தேவடியாள்களை, சாமியின் பெண்ஜாதிகளை, எல்லோரும் பெண்ஜாதிகளாக்கிக் கொள்வதைப்பார்த்தால், அவர்களுடைய பக்தியும், கல்லுச்சாமிகளின் மகிமையும் தெரியும். இந்தக்கல்லுச்சாமிகள், பெண்களுக்கு தாலிகளை கட்டி, தேவரடியாள்களாக்கி, ஊர் ஜனங்களுக்கு ஒப்ப

டைக்கும் தயாளசிந்தையை நினைக்க நினைக்க தலையில் அடித்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. தேவடியாளிடத்தில் கலவிசெய்வோனாகிய ஒருவன், சாமிக்கு வேறு என்ன துரோகம் செய்யவேண்டியிருக்கிறது? சாமிக்கு அபிஷேகம், ஆராதனை, நகைகள், கோயில், முதலியவைகள் எல்லாம் செய்து வைப்பவன் தேவடியாளிடத்தில் சிநேகித்தால், இவன், சாமி பொட்டுகட்டின பெண்ணிடத்தில் கூடியிருப்பதற்காக, சாமியை வசப்படுத்தி, சரிகட்டிக்கொள்வதற்கென்றல்லவா இவைகளெல்லாம் சாமிக்குச்செய்கிறான் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. கல்லுச்சாமியாயிருப்பதாலல்லவா இவ்வளவு இலகுவாக நினைத்துவிட்டான். ஆனால் கோவில்களினால் ஒரு நன்மையிருக்கிறது. சமூகத்தாரேலேயோ, சொந்தக்காரராலேயோ தடைசெய்யப்பட்ட காதலி, காதலர்கள் சந்திக்கவும், சந்தோஷமடையவும் கோவில்கள், திருவிழாக்கள் உபயோகப்படுவதைப்பற்றி ஒரு விதத்தில் நன்மையாகவே யிருக்கிறது. நிற்க.

நாம் இதையெல்லாம் எடுத்து தர்க்கித்து சொல்லுவோமாகில், நாம் முன்னமே எழுதியிருக்கிற மாதிரி, ஞானிகளுக்குத்தான் கோவில், விக்கிர ஆராதனைகள் வேண்டுவதில்லை என்றும், பாமரமக்களுக்கு அவசியமென்றும் பிடிவாதமாக சொல்லுவார்கள். பொதுவாக ஞானம் என்றால் அறிவு என்று பொருள்படும். ஞானிகள் என்றால் அறிஞர்கள் என்பதாகும். ஞானிகளுக்குத்தான் கோவில்கள் வேண்டியதில்லை என்றால் அறிஞர்களுக்கு கோவில்கள் வேண்டுவதில்லை என்பதாகும். அவர்கள் சொல்லுவதிலிருந்தே அவர்கள் அறி

வில்லாதவர்களென்றும், அறிவில்லாதவர்களுக்குக் கோவில் வேண்டுமென்று சொல்லுவது வருந்தத்தக்கதாக விருக்கிறது பின்னும் நாம் சொல்லுவோமானால், அதுவெல்லாம் ஞான மார்க்கம் என்பார்கள். மனிதர்களுக்கு அறிவான மார்க்க மாகிய ஞானமார்க்கத்தைத்தான் சொல்லவேண்டுமா, அல்லது "நாங்களெல்லாம் பாமரமக்கள், நாங்கள் அஞ்ஞானிகள் நாங்களெல்லாம் மடையர்கள், எங்களுக்குத்தகுந்த முட்டாள் மார்க்கம்தான் நமக்கு வேண்டும்" என்று இவர்கள் சொல்லுவதற்காக, பாலைகல்லிலே கொட்டுங்கள், நாசமாக்குங்கள், பணத்தைக்கொண்டு கோவில்கட்டுங்கள், கும்பாபிஷேகம் பண்ணுங்கள், ஐயாயிரம் பிராம்மணர்களுக்கு வடை பாயாசத்துடன் சாப்பாடு போட்டு, தட்சணை கொடுங்கள், திருப்பதிக்குக் காணிக்கை கொண்டுபோய் போடுங்கள், ராமேசுவாத்திற்குப் போய் தங்கத்தில் பசுமாடுசெய்து தானங் கொடுங்கள், சங்கராச்சாரிக்கு ஆயிரம் சொர்ன புஷ்பத்தை பாதகாணிக்கையாக சமர்ப்பித்து, அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று இவ்வாறு புத்தியில்லாதவர்களிடத்தில் பணம்பறிக்கச் சொல்லவேண்டிய விஷயங்களை சொல்லுவதா என்பது விளங்கவில்லை.

நாம் சுருக்கமாக சில விஷயங்களை இங்கு எழுதியதின் காரணம் பகுத்தறிவின்மையால் மக்களுடைய முயற்சிகளெல்லாம், பலவாறு சிதறுண்டு, தற்பொழுது அன்னிய நாட்டார் ஆளுகையில் அகப்பட்டுக்கொண்டு, ஆந்தைபோல் விழிக்கலாயிற்று. என்பதை எடுத்துக்காட்டுவதற்கே யாகும். நம் பகுத்தறிவை நாசமாக்கி, நம் சுதந்திரத்தை அபகரித்த, மூடநம்பிக்கையை நாம் இனி ஒழிக்கா

மலிருக்க முடியாது. மூடநம்பிக்கையால் சில நன்மைகள் உண்டென்று கருதுவோர், அதனால் அநேக ஆபத்தும், அபாயங்களுமிருக்கின்றன வென்பதையும் அறியவேண்டுமென்பதை மறுபடியும் இடித்துக்கூறுகின்றேன். மூடநம்பிக்கையுடன் ஒருவன் கடவுளை நம்பியிருப்பதைவிட அறிவுடன் கடவுளில்லை என்று சொல்லுபவனே சிறந்தவன். நாம் விடுதலையடையவேண்டுமானால் அறிவை விர்த்திபண்ணவேண்டும். கல்வியபிவிர்த்தி அவசியம். அறிவு தெளிவாவதற்கு பகுத்தறிவு மிகவும் முக்கியமாயிருப்பதால், பகுத்தறிவே விடுதலையளிக்கும் என்பதே எனது முடிவான அபிப்ராயமாகும்.

காதல்.

'காதல்' 'காதல்' என்று சூட்சமமாய் வழங்கிவரும் வார்த்தையை நான் ஆராய்ச்சி செய்து வந்ததாலும், அதன் ஆராய்ச்சி அவசியத்தை உணர்ந்ததாலும் அது பற்றி சில வாக்கியங்கள் வரைவது அநேகருக்கு அமைதியை அளிக்கக் கூடியதாயிருக்குமென்று எண்ணுகிறேன்.

'காதல்' என்பது நாம் உணரமுடியாத தனிப்பட்டதொன்றில்லை. ஒரு ஆணின்மீது ஒரு பெண்ணோ, ஒரு பெண்ணின்மீது ஒரு ஆணோ கொண்டுள்ள அளவுகடந்த ஒரு ஆசையேதவிர வேறில்லை. அந்த ஆசைக்கு, அவன் அல்லது அவள், உடைய அழகோ, குணமோ, இனி ஏதுவோ காரணமாய்த்தான் இருந்து தீரவேண்டுமே தவிர, வேறு எவ்விதமாகவுமிருக்கமுடியாது.

ஆனால் 'காதல்' என்பது காம இச்சைமாத்திரமல்லா மல், அத்துடன் அழகு இச்சையோ, குணத்தினிச்சையோ, சங்கீதத்தின் இச்சையோ, மற்றெவைகளோ சேர்ந்து, அந்த இச்சைக்காக, அந்த இன்பத்தை அடைவதற்காக ஒரு ஆணோ, அல்லது பெண்ணோ உலகத்திலுள்ள மற்ற இன்பங் கள் அனைத்தையும் இழக்கத் தயாராயிருக்கும்படியான ஒரு வித அளவுகடந்த ஆசை என்றே நான் எண்ணுகிறேன்.

பொதுப்படையாக, வெளிப்படையாக சொல்லவேண்டு மாகில், இவ்வுலகில் ஒவ்வொரு பெண்ணும், ஆணும், சகல ஜீவராசிகளும் ஒவ்வொரு லட்சியத்தைக்கோரி அதற்காக தங் களுடைய முயற்சிகளை செலுத்திக்கொண்டேதானிருக்கிறது. விளக்கமாகவும் தெளிவாகவும் சொல்லவேண்டுமானால் ஒவ் வொரு மனிதனும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நக ருவதும் கூட ஒரு இன்பத்தைக்கருதியே யாகும். எப்படி ஒருவனுக்கு சுயநலத்தைத் தேடிக்கொள்வது அவனுக்கு சாந்தியைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறதோ, எவ்வாறு ஒரு வனுக்கு பொது நலத்திற்காக உழைப்பது அவனுக்கு திருப் தியளிக்கக்கூடியதாக விருக்கிறதோ, எவ்விதமாய் அடிமை நாட்டிலிருப்பதை விட இறப்பதே சிறந்ததென்பது ஒரு வனுடைய லட்சியமாயிருக்கிறதோ, எப்படி ஒருவன் பணமே பிரதானமென்று 'லோபி' என்னும் இகழ்ச்சியான பட்டத் தையும் திருப்தியுடன் பெற்றுக் கொள்கிறானோ, எம்முறையில் ஒருவன் சங்கீதத்தின்பேரில் அதிகமாக பற்றுள்ளவனாக விருந்துகொண்டு மற்ற விஷயங்களை அலட்சியப்படுத்தி விடு கிறானோ, அதேமாதிரியே ஒரு ஆணோ அல்லது பெண்ணோ,

அவாவர் இச்சித்த ஆணையோ பெண்ணையோ அடைவது உலகத்திலுள்ள மற்றவின்பங்களைவிட சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதாக விருக்கலாம். இவ்விதமாகவுள்ள பல வித மனிதர்களில் பரலோகவின்பம், மோட்சமொன்றிருப்ப தாகக்கருதி பிரத்தியட்சமான, இகவின்பத்தைப் பலிகொடுக் கும் ஒரு பைத்தியக்காரக் கூட்டத்தாரைப்பற்றி பரிதாபப் படாமலிருக்க முடியவில்லை.

இம்மாதிரி ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு இன்பத்தை பிரதானமாகக்கருதி, அதை அடையாவிடில், அவர்கள் வாழ் நாள் பூராவும் மனசாந்தியில்லாமல், சந்தோஷமேயில்லாம விருக்க நேரிடுகிறது. இம்மாதிரியான வர்களில் ஒரு பெண்ணைக்கருதியுள்ள ஆணும், ஒரு ஆணை மனதில் எண்ணி யுள்ள பெண்ணும், ஒருவரை யொருவர் அடையாவிடில் மன அமைதியில்லாமல், சிற்சில சமயங்களில் உயிரையும் அதற்காக, காதலின்பத்திற்காக பலிகொடுத்திருப்பதும், பலிகொடுப்ப தும் சர்வசாதாரணமாக யாவரும் அறிந்துள்ளதே யாகும்.

ஆகவே காதல் என்பது மனிதருக்குள் ஒரு சாராரு டைய லட்சியமாகவேயிருக்கிறது. சங்கீதத்தை விட மீறிய இன்பம் உலகிலேயே இல்லை என்று சிலர் அபிப்ராயப்படு கின்றனர். சிலர் நல்ல புத்தகங்களையும், கலைகளையும், பாக் களையும் வாசித்துக்கொண்டிருப்பதே உலகில் அதிக இன் பத்தை தரவல்லது என்பது ஒரு பகுதியோர் கருத்து. உல கத்தில் சிநேகத்திற்கு மிஞ்சியது எதுவுமில்லை என்று பலர் சொல்லுவதையும் கேட்டிருப்பீர்கள்.

ஆகையால் சங்கீதம் தான் பெரிது என்பவனுக்கு சங்கீதத்தினுடைய இன்பத்தை அவன் தெளிவாக நகரக்கூடியவனாகவிருக்கலாம். சிலருக்கு சங்கீத வின்பத்தை அறியக்கூடிய சக்தியில்லாமலிருக்கலாம். ஒருவன் காதலுக்கிணை எதுவுமில்லை என்னலாம். அவனுக்கு அது அவ்வளவு பெரிதாகவோ, இணையற்றதாகவோ, அதிகமான இன்பம் கொடுக்கக்கூடியதாகவோவிருக்கலாம். மற்றவனுக்கு 'காதல்' என்பது மிகத்துரும்பாகவிருக்கலாம். முடிவாகச் சொல்லவேண்டுமானால், ஒவ்வொன்றும் ஒவ்வொருவருடைய மனப்பான்மையை பொருத்ததேயாகும். எப்படி சங்கீதவாசனை அறியாத ஒருவன் நெடுநேரம் அழகாக ராகம்பாடிக்கொண்டிருந்தால் "என்ன சும்மா இழுத்துக்கொண்டே யிருக்கிறான்" என்று சொல்லுவானோ, அதேமாதிரி ஒரு பெண்மீது அளவு கடந்த ஆசைவைத்து, அந்த ஆசையை பூர்த்தி செய்வதற்காக உயிரைவேண்டுமானாலும் இழக்கத் தயாராயிருப்பவனை, ஒரு பெண்மீது 'காதல்' கொண்டிருப்பவனைப் பார்த்து, எந்தப் பெண்ணின் மீதும் அளவுகடந்த ஆசையில்லாமல், மிதமாயுள்ளவன் "உனக்கு மாத்திரம் தனியாக என்ன ஒரு பெண்ணின்பேரில் அவ்வளவு ஆசை (காதல்) என்று கேட்கலாம். இதற்குப்பதில் ஒவ்வொருவருடைய மனப்பான்மைதான் காரணம் என்று முன்னமேயே தெரிவித்திருக்கிறேன்.

கரும்புதின்றவனுக்கு கரும்புருசி, வேம்புதின்றவனுக்கு வேம்பு ருசி, என்பதையொப்ப, அவரவர்கள் மனது எந்தெந்த வகையில் பழக்கப்படுத்திக் கொண்டுவந்திருக்கிறார்களோ, இடம், சமயசந்தர்ப்பங்களை யொட்டி அவரவர்கள் லட்சியங்

கள் தோன்றுவதும், மாறுவதும் இயற்கையே. காதலி
பது சில சமயங்களில், சிலருடைய நிகழ்ச்சியில் நீடித்
யும், சிலருடைய அனுபவத்தில் மாறக்கூடியதாயுமிருக்கல
நிற்க.

மனிதனுக்கு காதல் சுதந்திரமிருக்கவேண்டியது இன்
யமையாததாகும்; மனிதனுடைய இன்பத்திற்கு உ
துணையாயும், ஊன்றுகோலாயுமுள்ளது ஆண், பெண், இவ்
வருடைய ஒத்துழைப்பேயாகும். ஆண், பெண்ணை வா
கைத்துணையாகக் கொள்ளுவதும், பெண், ஆணை வாழ்க்கை
துணையாகத் தேடிக்கொள்வதும் இயற்கையே யாகும்.

பொதுவாக நம் நாட்டில் தீண்டாமையினும் கொடி
தாக உள்ளது என்னவென்றால், காதல் சுதந்திரத்திற்கு முட்
டுக்கட்டையாகவுள்ள, சமயசமூகங்களும், பழக்க வழக்கங்
களுமாகும். அவைகளை எல்லாம் இங்கு விரிக்கின் பெருகும்.
பொதுவாக தாய் தந்தையர், ஆணுக்குப்பிரியமில்லாத பெண்
ணிற்கும், பெண்ணிற்கு பிரியமில்லாத மாப்பிளைக்கும், பணத்
திற்காக ஆசைப்பட்டு இளமங்கையர்களை வயோதிகர்களுக்
கும், கல்யாணம்செய்துவைக்கும் கொடுமையைப்போல்,
பஞ்சமா பாதகம் வேறெதுவுமில்லை. ஒரு குடும்பத்தில் ஒரு
பெண் ஐயோ வென்று முந்தாணியை விரித்துப்படுத்தால் அக்
குடும்பம் ஈடேராது, கெட்டுப்போகும் என்று உலகோர்
சொல்லுவது நீங்கள் அறிந்திருக்கக்கூடும். அப்படியிருக்க
எத்தனை லட்சம் இளம் விதவைகள், புருஷன் பேரில் பிரிய
மில்லாமலும், புருஷனுடைய நடவடிக்கைகள் பிடியாமலும்,
புருஷனுடைய கொடுமையை சகிக்காமலும், எத்தனை லட்சம்

ண்கள் ஐயோ வென்று தங்கள் முந்தாணிகளை விரித்து கிதேவிந்தியா நாட்டின்கண் அலரி அழுகிறார்கள். ஒரு குடும் பத்தில் ஒரு பெண்ணின் மனம் நோவதால் அக்குடும்பத்திற்கு கேடழிவு ஏற்படுமென்றால் லட்சக்கணக்கான பெண்கள் தலை விரி கோலமாய் புலம்பிக்கொண்டிருக்கும் நம் இந்தியநாடு நாடுதலையெய்வது எங்கனம்! இக்கொடுமை போதாததற்கு தீண்டாமை நோயும் நம் பாரதநாட்டை வாட்டுகிறது. இவ் இரு கொடுமைகளைக் போக்காமல், இவைகளை ஒழிக்க முயாதிய பிரசாரங்களையும், தேவையானால் சத்தியாக்கிரகங் களையும் செய்யாமல், மக்களுக்கு அறிவைக் கொளுத்தி, பழைய பழக்க வழக்கக் கொடுமைகளைத் தகர்த்தெரியாமல், பக் குவமில்லாத நிலைமையில், மறியல்கள் செய்வதாயும், கதர் கதர் என்று மக்களை ஏமாற்றி, கேட்டால், உடனே சுயராஜி யம் என்று சொல்லி காலத்தைப் போக்கிக்கொண்டு வருகி றார்கள்.

எப்படி ஒரு நாயானது, தனது பிரதிபிம்பத்தையே ஒரு கண்ணாடியில் பார்த்துக்கொண்டு குலைக்கிறதோ, அதே மாதிரி, வியாபாரத்திற்கு வந்தவன் எப்படி நாட்டை ஆள நேர்ந்தது, நம்முள் ஏற்பட்ட தீண்டாமை, பெண்கள் அலங் கோலம் முதலிய கொடுமைகளே, நமக்கு எதிரியாக, அன்னி யர் ஆட்சிகளைக்கொண்டுவருகிறது என்று அறியாமல், அன் னியர் (வெள்ளையர்) மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

மனிதசமூகம் இன்பமாவேண்டுமானால் ஜாதி, மத, நிற பேதத்தை ஒழித்து, காதல் விஷயத்தில் ஆண், பெண் இரு பாலோருக்கும் சமசுதந்திரம் வழங்கவேண்டும்.

[stamp]

கோபால் பிரிண்டிங் ஒர்க்ஸ்,

உடுமலைப்பேட்டை.